# வெற்றிமுனை

பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 30/- ISSN - 2394 - 2428

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

*மலர் - 8* *அக்டோபர் - 2018* *இதழ் - 04*

*சிறப்பாசிரியர்*
நீதியரசர் ச. மோகன்
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

*முதன்மை ஆசிரியர்*
நீதிபதி மூ. புகழேந்தி

*ஆசிரியர்*
முனைவர் மோ. பாட்டழகன்
93804 17307

*பொறுப்பாசிரியர்*
பேரா. முனைவர் ச. விஜயலட்சுமி
இளம்கவி ஆதம் அகிலன்

*துணை ஆசிரியர்கள்*
பேராசிரியர் சு. முத்தையா
கவிஞர் திருவைபாபு
இர. மகேந்திரன்
கவிஞர் உமர் கத்தாபு
திருமதி. அனிதா பரமசிவம்
(எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்)

*முதன்மைச் செய்தியாளர்*
புலவர் குமரகுரு

*அமெரிக்கா - பொறுப்பாசிரியர்*
எழுத்தாளர் ஜெ. புவனேஷ்வரி

இலங்கை - பொறுப்பாசிரியர்
கம்சபிரியா

ஆலோசனைக் குழு

முனைவர் மருதூர் அரங்கராசன்
பேரா. திருமதி. சோதிலட்சுமி
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
எம். கோவிந்தன்
பேராசிரியர் அரங்க. சீனிவாசன்
இரா. கௌதமராஜன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி
முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி
முனைவர் ஈ. யுவராணி
சி. சதீஷ்

மின்னஞ்சல் மூலமும்
படைப்புகளை அனுப்பலாம்
vasantha.tha399@gmail.com

**இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகளை**
**அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர் 'வெற்றிமுனை'
26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
93804 17307

வசந்தா பதிப்பகத்தின்
பொன்விழா ஆண்டு வெளியீடு

முத்தமிழ்க் கவிஞர்,
முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
அவர்கள் எழுதிய

# "நூலகத்தால் உயர்ந்தேன்"

என்னும் வாழ்க்கை வரலாற்று ஆவணம்.

இந்நூல் தனிஒருவன் வரலாறு இல்லை. தமிழிலக்கியத்தின் குட்டி வரலாறு.

இந்நூலில் 2500 சான்றோர் வணக்கம் பெறுகின்றனர்.

***1100 பக்கம் கொண்ட இந்நூல் விலை உரு. 1200/ சலுகை விலை ரூ. 800/- மட்டும். நூல் வேண்டுவோர் :***

**தொடர்புக்கு :**

**முனைவர் மோ. பாட்டழகன்,**

**வசந்தா பதிப்பகம்,**
26, குறுக்குத் தெரு, சோசப்பு குடியிருப்பு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
பேசி : 044 - 22530954, 225333667, 93804 17307

| | | | |
|---|---|---|---|
| பெற்றோரைப் | போற்றிடுவோம் | பெருமையுடன் | வாழ்ந்திடுவோம் |
| கற்றோரை | நாடிடுவோம் | கலையெல்லாம் | மாந்திடுவோம் |
| வெற்றிமுனை | எய்திடுவோம் | விண்தொட்டுப் | பார்த்திடுவோம் |
| குற்றமில்லா | வாழ்வாலே | குவலயத்தைக் | காத்திடுவோம். |

**- நீதிபதி மூ. புகழேந்தி**

# இவர்கள் விவகாரமானவர்கள்

ஏ மனிதா! நீ எத்தனை வகைப்படுவாய்? எப்படியெல்லாம் உருவெடுக்கின்றாய்?

தோண்டத்தோண்ட வளரும் கனிமம் போல் உன்னைப் பற்றி எண்ண எண்ண ஒவ்வொன்றாய் குறையும் நிறையுமான கருத்துக்கள் வந்து கொண்டேயுள்ளன. நாளாக நாளாக உன்னை கணக்கிடுவது என்பது என்னால் இயலாமல் போய் விடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகின்றது. இல்லையென்றால் உன்னைப் பற்றி உன் குணாதிசயங்கள் பற்றி இவ்வளவு இலக்கியங்கள் தோன்றி இருக்குமா? அடேயப்பா! தமிழில் தான் எத்தனை படைப்புகள்! வள்ளுவரின் குறளாய் வாழ்க்கைக்கு நெறிகாட்டுகின்றதை நாம் ஏற்காமலிருக்க முடியுமா?

கம்பரின் கற்பனை வழிந்தோடும் காவியத்தை மறக்க முடியுமா? இளங்கோவின் ஏற்ற மிகு அரச நெறியையும் பெண்ணின் பெருமையையும் ஒதுக்க முடியுமா? பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, எட்டுத் தொகை, இதிகாசம், பாரதி, பாரதிதாசன், போன்றோரின் படைப்புகள்தான் யாருக்கு? ஷேக்ஸ்பியர், வோர்ட்ஸ்வோர்த், மில்டன், ஹோமர், எமர்சன்,



உமர்கயாம், மாயாகொஸ்கி, அலெக்சாண்டர் புஷ்கின், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் அப்பப்பா இவர்களின் இன்னும் சொல்லி மாளாத இலக்கியங்கள் உலகமெங்கும் வளர்ந்து கொண்டேயுள்ளன.

ஒவ்வொருவரையும் நாம் எடை போட தயங்குவதில்லை. எடை போட்டுத்தான் ஆக வேண்டும். அப்போதுதான் நாம்

யார்? காந்தி யார்? கோட்சே, யார்? பெரியார், யார்? நேரு யார்? என்பது போன்றவர்களை நாம் எடுத்துக் காட்டமுடியும். ஒருவரைச் சொன்னால் இவர் நல்லவர், இவர் திறமையானவர், இவர் ஞானி, இவர் கொடையாளி, இவர் கொடூரமானவர், இவர் எத்தர், இவர் ஏமாற்றுப் பேர்வழி, இவர் பொய்யர், இவர் நேர்மை யானவர், இவர் பெண்பித்தர், இவர் பேராசைப் பிடித்தவர், இவர் உதவாக்கரை, இவர் வெறும் வாய் வார்த்தைப் பேர்வழி, இவர் சண்டைக்கோழி - இப்படியே நம்மை நாம் கணக்கில்லாமல் கணக்கிட்டுக்கொண்டே போக லாம்.

இவர்களெல்லாம் கலந்தது தான் உலகம். இதில்தான் இவர் களுடன் தான் நாம் வாழ வேண்டும். நாம் மட்டும் அதில் விதிவிலக்கல்ல ஏதாவதொரு வகையில் நாமும் கணக்கிடத் தான் படுவோம். சில நேரங்களில் நம் மனசாட்சிப்படி நாம் எந்த வகை என்று நாமே முடிவு செய்துக்கொள்ளலாம். அது கெட்டதாக இருப்பின் நாம் திருந்திக்கொள்ளலாம் அல்லது திருத்திக்கொள்ளலாம். அதை விடுத்து அதுதான் சரி அல்லது அப்போது அது நமக்கு மகிழ்ச்சித் தருகின்றது என்பதற் காக அதை விடாமல் மட்டுமல்ல அதை வளர்த்துக் கொண்டு போகும் மனப்பாங்கும் நமக்கு வரலாம். எல்லாம் சூழ்நிலை யைப் பொருத்தும் மனப்பக்கு வத்தைப் பொருத்தும் அமையும் என்பதை மட்டும் நாம் உணர வேண்டும்.

விவகாரமானவர்கள் என்ப தை அலசி ஆராய்ந்து பார்த்தால் சில விவரங்கள் கிடைக்கும். விவகாரமானவர்களால் தான் வாழக்கையில் பல விவகாரங் கள் நடக்கின்றன..

அப்படி இல்லையென்றால் எதற்காக அவர்கள் மீது ஊழல் வழக்குகள் எழுகின்றன? ஊழலின் உறைவிடமாக அது இருப்பதால் தான் நாட்டினுடைய நிர்வாகத் தில் இடர்பாடுகள் ஏற்படு கின்றன.

இன்று பார்த்தால் அரசியல் விவகாரக்காரர்களுக்கு வழி காட்டுகின்றது; பாதுகாப்பளிக் கின்றது. பெருந்தொகையைக் கடனாகப் பெற்று அதைத் திருப்பிச் செலுத்தாமல் இழுத் தடிப்பது விவகாரமானவர் களுக்குக் கைவந்தக்கலை. கெடு பிடி செய்யுங்காலத்தில் தப்பித்து ஓடிவிடு கின்றனர்.

இப்படி தடுக்கிவிழுந்தால் விவகாரமானவர்கள்மேல் தான் விழவேண்டும். எந்தத் தொழி லிலும் அவர்கள் இல்லாமலில் லை. எதற்கும் நாம் கவனமுடன் இருக்கவேண்டும். அதுவே சிறந்த வழி.

மக்கள் நலம் நாடும்,

**நீதிபதி மூ.புகழேந்தி**

# செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் வானியல் கூறுகள்

**இரா. கார்த்திக்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி. 630 003.

## முன்னுரை

குறிப்பிட்ட நேரத்தில் அமையும் காற்று மண்டலத்தின் பௌதிக நிலைமையை அறியும் நிலையே வானியல் ஆகும். காற்றழுத்தம், வெப்பநிலை, ஈரப்பதம் போன்ற அளவீடுகளைத் துல்லியமாக வானியலில் அறியலாம். விண்வெளியில் நிகழும் கோள்களின் தன்மை சார்ந்த நிகழ்வுகளை அறிந்த பழந் தமிழரின் வானநூற்புலமையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வானியல் விளக்கம்

வானியல் என்னும் சொல் குறித்துப் பலவகை விளக்கங் களும் அறியப்பெறுகின்றது. அவ்வகையில்,

''இரவில் வானம் தெளிவாக உள்ள போதும் கூட நாம் மூவாயிரம் நட்சத்திரங்களுக்கு அதிகமாக வெறுங்கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் 200 அங்குல விட்டமுடைய லென்ஸ் உள்ள மிகப் பெரிய டெலஸ்கோப் வழியாகப் பார்த்தால் சூரியனைப் போல் பல கோடி கோளங்களையும் அவை ஒவ் வொன்றையும் பல கோளங்கள் சுற்றி வருவதையும் காணலாம். நம்முடைய சூரியன் பல நட்சத் திரங்களை விட சிறியது என்றும் தெரியும். அது பெரியதாகவும், ஒளி மிக்கதாகவும் நம்முடைய கண்களுக்குத் தெரிவதற்குக் காரணம் அது நமக்கு அருகில் இருப்பதேயாகும். இப்படி பல விதமான கோள்களைப் பற்றிய விஞ்ஞானமே வானவியல் ஆகும் என்று விளக்கம் அளிக்கின்றன.

## ஆகாயம்

வானம், விசும்பு என ஆகாயத்தைப் பல்வேறு

பெயரில் வழங்குவர். தமிழில் ''வெற்றிடம்'' எனவும் வழங்கப் பெறுகிறது. காற்று ஊடு போகாத இவ்விசும்பு வெறுமையானது என்பதைக் கிரேக்கர்களும், பிளோட்டோவும் மறுத்துள்ளனர். பிற்காலத்தில் கி.பி.10ஆம் நூற்றாண்டில் அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த ஹீரோ என்பவர் மட்டும் நம்பினார். சங்கப் புலவர்கள் ''வறிது நிலையே காயம்'' என்ற தொடர் மூலம் ஆகாயம் வெறுமையானது என்கின்றனர். இம்முறையினை,

''வளி வழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றாங்கு'' (புறநா., 20:3-4)

''வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு
மென்றிவை'' (புறநா.,350:3-4)

''வளியிடை வழங்கா வானஞ்
சூடிய'' (புறநா.,35:2)

என்னும் புறப்பாடல் வழி விசும்பு இருள் மயமானது என்ற விஞ்ஞானிகள் கருத்து பதிவாகி உள்ளது. இங்ஙனம் காற்று நுழைந்து செல்ல முடியாதபடி வெட்ட வெளியாக ஆகாயம் அமைகின்றது. இதே கருத்தினைப் புறநானூற்றில் (புறநா., 365:3) என்ற பாடல் அடி உணர்த்துகின்றது. வானியல் முறைப்படி புவியின் காற்று மண்டலத்துக்கு அப்பாலுள்ள விண்வெளி நம்மால் அளவிட்டு அறிய முடியாது. இருப்பினும் இருள் சூழ்ந்த ஆகாயத்தில் நிறைய விண்மீன்களைக் காண முடியும். இத்தன்மையினை,

''அகலிரு விசும்பின் மீனினும்''
(குறுந்.,44:3)

என்ற பாடலடி மூலம் குறுந்தொகையில் வெள்ளி வீதியார் உணர்த்துகிறார். இங்கு தன்னை ஒழிந்த ஏனைய நான்கு பூதங்களும் அகன்று விரிவதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம் பல விண்மீன்கள் கொண்டு விளங்கும் என்ற வானியல் நுட்பம் புலனாகின்றது.

## சூரிய வட்டம்

பூமி முதலாய கோள்கள் சூரியனை மையமாகக் கொண்டு சுழன்று வருகின்றன. புறநானூற்றில் செஞ்ஞாயிற்றின் வழிச் செல்லவும், தென் பரிப்பும், மண்டிலமும், திக்கும், ஆகாயமும் என இவற்றின் அளவை நேரில் சென்று கண்டவரைப் போலத் தம் அறிவால் ஆராய்ந்துரைக்கும் சங்கப் புலவர் சோழன் அவையில் இருந்ததாக உறையுர் முதுகண்ணன் சாத்தனார் பாடுகிறார். இச்செய்தியினை,

''செஞ்ஞாயிற்றைச் செலவு
மஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண்
டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு
மென்றிவை

சென்றளத் தறிந்தோர் போல
வென்றும்
இனைத்தென் போரு முளரே
யனைத்தும்'' (புறநா.,30:1-6)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றது. இதில் கதிரவனுக்குப் பிற கோள்களை ஈர்க்கும் ஆற்றல் உண்டு என்பது புலப்படுகின்றது. சூரியன் பூமியிலிருந்து சுமார் 15கோடி கி.மீக்கு அப்பால் நமக்கு அருகில் இருக்கின்றது. எனவே தான் எட்டுக் கோள், வால்நட்சத்திரம், மற்றும் பிற துணைக்கோள்களைக் கட்டுப்படுத்தவும் முடிகின்றது. இதனாலே சூரிய வட்டம் சுழற்சி அவசியமாகின்றது என்ற வானியல் கூறு அறிய முடிகின்றது. பிறிதொரு பாடலில் சூரியன் வடக்கு, தென் திசையில் சுழலும் தன்மையைப் புறநானூற்றில்,

''பொழுதென வரைதி புறக்
கொடுத் திறத்தி
மாறிவருதி மலைமறைந்
தொளித்தி'' (புறநா.,8:7-8)

என்ற பாடல் அடிகள் உணர்த்தும். இதில் சூரியன் வடக்கும், தெற்குமாகிய இரு இடங்களில் மாறி மாறி வரும் என்ற வானியல் உண்மை புலனாகிது.

## வளர்பிறை, தேய்பிறை

மதியானது வளர்பிறையின் போது மேற்குத் திசை நோக்கியும் தேய்பிறையின் போது கீழ்த்திசை நோக்கியும் செல்வதுண்டு. இத்தகு நிலவின் பயணத்தைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவற்றுள்,

''தேய்த லுண்மையும் பெருக
லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த
லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு
முலகத்து..''
(புறநா.,27:11-14)

என்ற புறப்பாடல் வழி திங்களின் இயக்கம் வளர்தலும், தேய்தலும், ஆகிய தன்மைகளை உடையது என்பது புலனாகிறது. இதன் வழி திங்களின் இயக்கம் இவ்வுலகில் சீராக நடைபெற்றால் தான் உயிர்கள் வாழ முடியும் என்ற வானியல் சிந்தனை பதிவாகி உள்ளது. மற்றொரு பாடலில் பிறையாகத் தோன்றிய திங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து உலகிற்கு ஒளியைப் பரப்பி பயன் விளைவிப்பதாகப் பரிபாடலில் (பரி.,11:31-34) என்ற பாடல் குறிக்கின்றது. இங்கு வையை ஆற்று நீரின் வளமை வளர்பிறையோடு இணைத்து உவமித்தனர். இதன் வழி வளர்பிறை நாளில் நீராடல் உள்ளிட்ட நல்ல நிகழ்ச்சிகள் தொடக்கம் பெறும் என்பது புலனாகின்றது.

பெரியோர் நட்பு பிறைச் சந்திரனைப் போல் நாள்தோறும் வளர்வதும், கீழ் மக்கள் உறவு

வானில் தவழும் முழுமதி போல் நாள்தோறும் தேய்ந்து குறைவதும் உண்டு என்ற வானியல் மாற்றத்தை அப்படியே நாலடியார் சுட்டுவதை

''பெரியவர் கேண்மை பிறை
போல நாளும்
வரிசை வரிசையா நந்தும்
வரிசையால்
வான் ஊர் மதியம்போல் தேயுமே
தானே சிறியார் தொடர்பு''
(நாலடி., 125:1-4)

என வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதில் முழுமதி தேய்வதும், பிறைமதி வளர்வதும் அறிவியல் உண்மையாகின்றது. இங்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சந்திரன் தேய்ந்து வளரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறையின் தன்மை

பூமியிலிருந்து சந்திரனைப் பார்க்கும் போது சந்திரனானது அதன் இருப்பிடத்தைப் பொறுத்து வெவ்வேறு அளவில் காட்சியளிக்கும். இதனையே ''பிறை'' என்பர். பிறைமதியின் இரு கோடும் கூடிய வழி முழுமதியாகவும், கோடு கூடாத போது பிறையாகவும் காணப் பெறும். இப்பிறையாகிய முடிவேந்தர்கள் அரணை அழித்துக் கொண்டு வந்த பொருட் குவியலைப் போன்று கூதிர்க் காலத்தை வெண்டிங்கள் வீசும் தன்மையைச் சிறுபாணாற்றுப் படையில் தெளிவாக உணர்த்துவர். இதனை

''நயவர் பாணர் புன்கண்
தீர்த்தபின்
வாயவ் தந்த வான்கேழ்
நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி ஊர் கொண்
டாங்கு'' (சிறுபாண்.,249-251)

என வரும் அடிகள் சுட்டுகின்றன. இதில் குறிப்பிட்ட பருவப் பொழுதில் பிறை பால் போலும் ஒளி வீசும் என்ற வானியல் உண்மை புலனாகின்றது.

முழுத்திங்களாகிய நிலவு அமாவாசை இருட்டில் இருந்து சிறிது சிறிதாகப் பெருகி இரண்டு மூன்றாம் பிறையாக வளர்ந்து பின்னர் பதினான்கு நாட்கழித்து பெரிதாய் வட்டமாய்க் காணப் பெறும். இவ்வெளிச்சமானது சிறிது குறைந்து கொண்டே தேயவும் ஆரம்பிக்கின்றது. இதனையே ''தேய்பிறை'' என்பர். இச்செயலைக் கலித்தொகையில்,

''நீள்கதிர் அவிர்மதி நிறைவு
போல் நிலையாது
நாளினும் நெகிழ்பு ஓடும் நலன்
உடன் நிலையுமோ?
(கலி.,17:7-8)

என்னும் பாடல் சுட்டுகிறது. இதில் தலைவியின் அழகானது திங்களின் பிறை போல நிலைத்து இராது நாள்தோறும் நிலைகெட்டு தேயும் என்று

உவமிப்பர். வானியல் கூற்றுப் படி சந்திரன் நாள்தோறும் வளர்ந்து தேயும் என்பது புலனாகின்றது. இரவில் பால் போலும் ஒளிபரப்பும் திங்கள் சூரியன் மேற்கு மலையை அடைந்ததும் இருள் தங்கும்படி தோன்றுகிறது. அக்காட்சியை எலியை இரையாக உண்ணும் கூகையின் சேவலோடு இணைத் துப் பரணர் பாடுகிறார். இதனை,

''பகலுரு உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவரி யும்மே
திங்கள் கல்சேர்பு கலையிருள் மடியின்
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை''
(அகநா.,122:1-13)

என்ற அகநானூற்றுப் பாடல் வழி புலப்படுகிறது. இதில் வானம் இருள் சூழ நிலவு தோன்றும் அறிவியல் உண்மை புலனாகிறது. சூரியனிடமிருந்து ஒளி ஆற்றலைப் பெறுவதால் நிலவு ஒளி பளிச்சிடும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மேலும், வெண்மதியான வளர்பிறை நாளில் ஞாயிறு எழும் முன்பே திங்கள் மறையும் காட்சியை நாடுகாண் காதையில் காண முடிகிறது.

## முடிவுரை

பிறப்பு, இறப்பு மற்றும் போர் உள்ளிட்ட நிகழ்வினை சோதிட முறைப்படி அறியும் கணக்கரும் இருந்துள்ளமையை இலக்கியங்கள் தெளிவுறுத்து கின்றன. ஓவியம் மூலம் புராண இதிகாசங்களை வெளிபடுத்தும் குறியீடாக நாள். கோள் மீன்களின் தன்மையும் வெளிப் படுகின்றது. இரவில் தோன்றும் விண்மீன் கூட்டம் அமாவாசை நாளில் பால்வெளி போல தோன்றியமையை ஆற்றுப் படைகள் பதிவு செய்கின்றன. நிலவின் ஈர்ப்பு விசை காரண மாகத் தோன்றும் இவ் வெண் ணிறமே அண்டங்கள் என்று அழைக்கப்படுகிறது. வானியல் மாற்றத்தால் நிலவக் கூடிய எரிமீன், வால்மீன்கள் பூமியை நோக்கி வந்தடையின் உலகம் அழிய நேரிடும் என்ற குறிப்பும் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. புறப்பாடலில் சுட்டக் கூடும் வால்மீன் மென் பொருள் ஆய்வின் படி கி.பி.66 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தோன்றி யது என்ற அறிஞர்கள் கருத்து இங்கு சுட்டப்பெறுகின்றது.

✵

உன்னதமான ஒவ்வொரு
வேலையும் முதலில்
முடியாததாகவே தோன்றும்.

# கவிஞர் அ. மருதகாசியின் பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

**ச. செந்தில் வேலன்,**
தமிழ்த்துறைத் தலைவர்,
சன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கீரனூர், திருவண்ணாமலை- 606 755

## திரைப்படம்

திரைப்படம் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவசியமான ஊடகமாகி விட்டது. வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் போன்ற இதர ஊடகங்களும் திரைப்படங்களை ஆதாரமாகக் கொண்டே செயல்பட்டு வருகின்றன. தமிழர்கள் கலையுணர்வில் தோய்ந்தவர்கள். அதிலும் திரைப்படக் கலையினையும், திரையிசைக் கலைஞர்களையும் உயிருக்குயிராய் நேசிக்கின்றவர்கள். அவர்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் திரைப்படமானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## திரையிசைப் பாடல்கள்

திரைப்படங்களின் வெற்றிக்கு கதையை விட வசனங்களை விட பாடல்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. தாயின் தாலாட்டை விரும்பாத பிள்ளைகள் கூட இருக்கலாம். ஆனால் திரைப் படப் பாடல்களை விரும்பாதவர்கள் யாரும் இல்லையென்றே சொல்லி விடலாம். அந்த அளவிற்குத் திரையிசைப்பாடல்கள் தமிழர்களின் வாழ்வோடு அவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றிக் கலந்திருக்கின்றன.

## கவிஞர் அ. மருதகாசி

தமிழ்த் திரையிசைப் பாடல்கள் பல்வேறு தலைமுறைகளைக் கடந்து வலம் வந்து கொண்டிருக்கின்றன. பல திரையிசைக் கவிஞர்கள் இத்துறையில் தோன்றி சிறந்த பாடல்களை இயற்றி தமிழர்களின் இதயத்தில்

நீங்காத இடம் பெற்றிருக்கின்றார்கள். மதுரக்கவி பாஸ்கர தாஸ் முதற்கொண்டு இன்றைய இளம் கவிஞர்கள் வரை பல கவிஞர்கள் அற்புதமான பாடல்களை இயற்றி காற்றினிலே தங்கள் கீதங்களை மிதக்க விட்டிருக்கின்றார்கள். அத்தகைய கவிஞர்களுள் சிறப்பிடம் பெறுபவர்தான் கவிஞர் அ. மருதகாசி. பாமரர்கள் முதல் படித்த மேதைகள் வரை அனைவரும் பாராட்டுகின்ற பாடல்களை எழுதி திரையுலகிற்கு சேவை புரிந்தவர் கவிஞர் அ. மருதகாசி ஆவார்.

### மருதகாசியின் வாழ்க்கை

கவிஞர் மருதகாசி கும்பகோணத்தின் அருகிலுள்ள மேலக்குடிக்காடு எனும் சிற்றூரில் 13-02-1920 ஆம் ஆண்டில் வசதியான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். கிராமத்து ஆரம்பப் பள்ளியிலும், கும்பகோணத்தில் இன்டர்மீடியட் வரையிலும் படித்தவர். முதலில் நாடக இரசிகராகவும், நடிகராகவும் இருந்து நாடக ஆசிரியராக மாறியவர். பிறகு நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதி திரைப்படக் கவிஞராக மலர்ந்தார். மருதகாசியின் பாடல்கள் எளிமையும், இனிமையும், கருத்தாழமும் மிக்கவை. இலக்கியத் திறமும் கிராமிய மணமும் கொண்ட இவரது பாடல்கள் மக்களின் வாழ்விற்கு வழிகாட்டியாய்த் திகழ்பவை. சிறந்த பாடல்களைத் தந்ததால் இவர் திரைக்கவித் திலகம் என்று போற்றப்படுகின்றார். இவரது பாடல்களில் இடம் பெற்ற வாழ்வியல் நெறிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மருதகாசியின் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்:

மண்மணக்கும் கவிஞரான மருதகாசி மக்கள் வாழ்விற்கு வழி காட்டும் நற்கருத்துக்களைத் தம் பாடல்கள் மூலம் விளக்குகிறார். நேர்மையான தூய்மையான வாய்மையான நெறிகளை வகுத்தளிக்கின்றார். அவர்தம் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை இனிக் காண்போம்.

### வள்ளுவர் வழியே நல்வழி

குறள் போன்ற ஒரு நூல் குவலயத்தில் இல்லை. ஒன்றே முக்கால் அடியால் உலகத்தை அளந்தவன் வள்ளுவன். திருக்குறளில் இல்லாததில்லை திருவள்ளுவன் வாய் சொல்லாததில்லை. வையகத்திற்கே வழிகாட்டிய வள்ளுவன் அவன் வழியிலே மக்கள் நடை போட வேண்டும் என்பதைத் தம் திரையிசைப்பாடல்கள் மூலம் அ. மருதகாசி விளக்குகின்றார். மனிதகுலம் திருக்குறளைக் கற்று அதன் திசையில் பயணம் செய்ய

வேண்டும் என்பதைக் கீழ்க் காணும் பாடல் மூலம் தெளிவு படுத்துகின்றார்.

அறிவுக்கு விருந்தாகும்
திருக்குறளே வள்ளுவர்
ஆக்கி நமக்களித்த அறம்
பொருளே
உடலுக்கு உயிர்போலே உலகுக்கு
ஒளிபோலே
பயிருக்கு மழை போலே
பைந்தமிழ் மொழியாலே

என்று திருக்குறளின் பெரு மையினைக் கவிஞர் எடுத்தியம் புகிறார். உலகப் பொதுமறை யாய் ஒப்புயர்வற்ற தனிநூலாய்த் திருக்குறள் திகழ்கின்றது. சாதி மத இன மொழிகளைக் கடந்து மனித இனத்திற்கே வழிகாட்டக் கூடிய திருவிளக்காய்த் திருக்குறள் விளங்குகின்றது. கவிஞர் பிறிதொரு பாடலில்,

வள்ளுவன் குறள்சொல்லும் பொருள்தன்னை உணர்ந்தே

வாழ்வில் ஒன்றுகலந்தே
குலவிமகிழ்ந்தே
அறிவுநிறை மக்கள்
செல்வத்துடன்
வாழிய நீடுழி புவி மீதிலே

என்று வாழ்த்துகின்றார்.

## ஆடம்பரமும் அழகு நகைகளும்

வரவுக்கேற்ற செலவு வேண்டும். வாழ்க்கையில் வரவுக்கு மீறி செய்யும் செலவு அல்லலையும் ஆபத்தையும்தான் தரும். இல்லாத ஏழைகள் ஒருபுறம் இருக்க, அவர்கள் கண்ணை உறுத்தும் வகையில் செல்வந்தர்கள் ஆடம்பரமாக வாழ்வது தவறானது. இன்றைய திருமணங்கள் தங்க நகைக்காக வும் பிறர் மெச்சவேண்டும் என்பதற்காகவும் ஆடம்பரமாக நடத்தப்படு கின்றன. கடன் வாங்கியாவது நிலத்தை நீரை விற்ருவது திருமணம் நடத்த வேண்டும் என்பது இன்று எல்லோரின் நப்பாசையாய் இருக்கின்றது. நகை ஆசை யானது மனித குலத்தை ஆட்டி வைப்பதோடு பெண் குலத் திற்குப் பெரும் சீரழிவைத் தந்து கொண்டு வருகின்றது.

உணவுக்கு ஒருகும்பல் போராடும்
வேளையில்
பதவிக்கு ஒருகும்பல் போராட்டம்
நடத்துது

என்று வர்க்க வேறுபாட்டின் கொடுமையை மேற்காணும் பாடல மூலம் கவிஞர் உணர்த்து கின்றார்.

கல்யாணம் செய்யவே சிங்காரப்
பந்தலும்
கச்சேரி சதுராட்டம் ஊர்வலமும்
வேணுமா?
இல்லாமல் எவரேனும் கல்யாணம்
பண்ணினால்
இன்பசுகம் பிள்ளைக்குட்டி
இல்லாமல் போகுமா?

இப்பாடல் இன்றைய காலக்கட்டத்திற்கும் மிகச்

சரியாய்ப் பொருந்துகிறது. நுகர்வு கலாச்சாரம் பெருகி வரும் இந்நாளில் கட்டிலும் பீரோவும் வகைவகையான நகை களும் புட்டித் திருமணங்கள் பெரும் ஆடம்பரத்துடன் நடத்தப் பெறுகின்றன. இதனால் பாதிக்கப்படுவது நடத்தர மக்களும் ஏழைமக்களும் தான் இதனைக் கருத்தில் கொண்டு இயன்ற அளவிற்கு எளிமையாய் வாழ வேண்டியது அனைவரின் கடமையாகும். மேற்காணும் பாடல் இக்கருத்தைச் சிறப்பாய்க் கவிஞர் விளக்குகின்றார்.

## நாட்டு ஒற்றுமையும் நமது பங்களிப்பும்

நாட்டுப்பற்று நமக்கு மிகவும் அவசியமானது. நாடும் வீடும் நம்மிரு கண்களாய்த் திகழ வேண்டும். அரசன் எவ்வழி: குடிகள் அவ்வழி. நாடு என்பது அமைதி நிறைந்ததாக வளம் நிறைந்ததாகத் திகழ்ந்தால் தான் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். நம் பாரத நாடு எதிர் காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தம் பாடல் மூலம் கவிஞர் தெளிவு படுத்துகின்றார்.

வானம்பெய்து நாட்டிலே வளம்
நிறைந்து வீட்டிலே
மாசில்லாத இன்பம்பொங்கி மக்கள்
வாழ்க்கை ஏட்டிலே

நாடு நலமுடையதாய்த் திகழ்வதற்கு நம் பங்களிப்பை ஆற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்குண்டு. ஒவ்வொரு குடிமகனும் தம்மால் இயன்ற அளவிற்கு நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்பதைத் தம் பாடல் மூலம் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

நீதியுள்ள ஆட்சியே நிலவுகின்ற
மாட்சியே
யாருங்காண நமதுநாடு
ஆகவேணும் சாட்சியே

என்று கவிஞர் பாடுகின்றார்.

நாட்டு மக்கள் சாதிமத வேறுபாடுகள் இன்றி கடமை யாற்ற வேண்டும் என்பதைக் கீழ்க்காணும் வரிகளில் கவிஞர் விளக்குகிறார். ஒற்றுமைதான் உயர்வுக்கு வழி ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு என்பதைக் கவிஞர்தம் பாடல் உணர்த்துகின்றது.

ஒற்றுமையாய் வாழ்வதாலே
உண்டு நன்மையே
வேற்றுமையை வளர்ப்பதனாலே
விளையும் தீமையே
உணர்வோடு ஒன்றியே உருவாகும்
பாசமே

என்ற கவிஞரின் பாடல் கருத்திற்கேற்ப ஒற்றுமையுடன் வாழ்வது நமக்குச் சிறப்பைச் சேர்ப்பதாகும்.

## உழவே நாட்டின் தலை

உழுபவன் பின்னால்தான் இந்த உலகம் செல்கின்றது. உழவுத்தொழிலே தலையான

தொழில். ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமேயில்லை என்கிறார் கவிஞர்.

நெத்தி வேர்வை சிந்தினோமே
முத்து முத்தாக
அது நெல்மணியா குவிஞ்சிருக்கு
கொத்துக் கொத்தாக

என்பது கவிஞரின் பாட லாகும். உழவுத்தொழிலைப் போற்றி வளர்க்க வேண்டியது நம் தேசத்தின் கடமையாகும்.

தைத்திருநாள் உழவர்கள் மகிழ்வுடன் கொண்டாடுகிற ஒப்பற்ற நாளாகும். அறுவடை செய்த நெல்லை அரிசியாக்கி, புதுப்பானையில் வைத்து கதிரவனுக்குப் படைத்துக் கொண்டாடுவது அதன் சிறப்பு. உழுகின்ற காளைகளுக்கும் பயிர் விளைவித்த மண்ணுக்கும் பாசத்துடன் நன்றி நவிலுகின்ற இப்பொன்னாளின் மகிமையைக் கவிஞரின் பாடல் பெரும் கொண்டாட்டத்துடன் எடுத்துரைக்கின்றது. ஆம். தைப் பொறந்தால் அனைவருக்கும் வழி பிறக்கும்.

தைப்பொறந்தால் வழிபொறக்கும்
தங்கமே தங்கம்
தங்கச்சம்பா நெல்விளையும்
தங்கமே தங்கம்
ஆடியிலே வெதவெதச்சோம்
தங்கமே தங்கம்

என்று கவிஞர் பாடி தைத் திருநாளினை நம்மோடு கொண் டாட வைக்கின்றார். விளை நிலங்கள் எல்லாம் வீட்டு மனை களாகிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் நெல் நடுகின்ற நிலங்களெல்லாம் கல் நட்டு விற்றுக் கொண்டிருக்கின்ற இக் காலக்கட்டத்தில் உழவுத்தொழி லைப் பாதுகாக்க வேண்டிய கடமை கவிஞரின் வழி நின்று நிகழ்த்த வேண்டிய பொறுப் பாகும்.

என்ன வளம் இல்லை இந்த
திருநாட்டில் ஏன் கையை ஏந்த
வேண்டும் வெளிநாட்டில்?

## காலத்தால் அழியாத கல்வெட்டுக்கள்

கவிஞரின் திரையிசைப் பாடல்கள் காலத்தால் அழியாத கல்வெட்டுக்களாகும். கவிஞரின் திரையிசைப்பாடல் களில் சிலவற்றை மட்டுமே ஆய்ந்து அவர் காட்டிய வாழ் வியல் நெறிகள் இக்கட்டுரை மூலம் விளக்கப்பட்டன.

✵

வாழ்க்கையில் இடர்பாடுகள் அவசியம். ஏனென்றால் வெற்றி என்ற மகழ்ச்சியை அனுபவிக்க அவை உதவியாக இருக்கும்

# முருகவேலுக்குப் பத்துத் திருமுறை

**முனைவர் க.பரமேஸ்வரன்**
தமிழ்த்துறைத் தலைவர்
தொலைநிலைக் கல்வி இயக்ககம்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை- 21.

## முன்னுரை

சிவபெருமானுக்கு உரிய திருமுறைகள் முதலிற் பத்து, பின்பு அவை பதினொன்றாகிப் பின்னர்ப் பன்னிரண்டாயின அதுபோல முருகவேலுக்கும் பத்துத் திருமுறை முதலில் அமைதல் தகுதியாம்:

அ) இசைப்பாக்களான தேவாரம் பிரிக்கலாம். ஆறு படைவீட்டுத் திருப்புகழ்களை ஆறு திருமுறைகள் பிற தலங் களின் திருப்புகழும் பொதுத் திருப்புகழும் ஏழாந்திருமுறை எனலாம்.

ஆ) இயற்றமிழில் எட்டாந் திருமுறை - திருவாசகர் திருக் கோவையார் - இவைக்கிணை யாகத் திருவாசகம் அனைய தந்தரலங்காரமும் திருக்கோவை யாரனைய கந்தரந்தாதியும் எட்டாந் திருமுறையாம் என்க

இ) இசைத் தமிழாய் ஒன்பதாந் திருமுறையாக விளங்கும் திரு விசைப்பாவுக்கு ஒக்க இசைப்பாவாம் திருவகுப்பு ஒன்பதாந் திருமுறையாக விளங்கும்.

ஈ) மந்திர நூலாய்ப் பத்தாந் திருமுறையாக உள்ள திருமந்திர நூலுக்கு இணையாக மந்திர நூலாகிய கந்தரநுபூதி பந்தாந் திருமுறையாகக் கொள்ளலாம்

2) இனித் திருமுருகாற்றுப் படை, பரிபாடலற் செவ்வேளுக் குரிய தோத்திரப் பகுதிகள், குறுந்தொகையில் முருகர் துதி, சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையில் முருகருக்கும் வேலுக்கும் உரிய பகுதிகள், கல்லாடத்தில் முருகர் துதி, சேந்தனாரது திருவிடைக் கழத் திருவிசைப்பா, குமரகுருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலி வெண்பா கந்தரநுபுதியைப் பொருள் வழி ஆயுமிடத்து

அதிலுள்ள பாடல்கள் தவங் கிடந்த நிலையில் பாடப்பட்டன சில, தவகிடந்தும் சாந்தி பெறாது கலக்கமுற்ற நிலையிற் பாடப் பட்டன. சில பேறுபெற்று ஞான நிலையிற் பாடப்பட்டன சில: உலகுக்கு உபதேசமிகப் பாடின சில - எனப் பகுக்கக் கூடியன வாய் உள்ளன.

அவைதாம் - தவங்கிடந்த நிலையிற் பாடினவை பதிமூன்று பாடல்களாகும். அதனை, கந்தரனுபூதி பாடல்கள் 1, 2, 3, 6, 15, 18, 21, 36, 37, 40, 47, 48, 51 முதலிய எண்களைக் கொண்டன ஆகும்

சாந்தி பெறாது கலக்கமுற்ற நிலையிற் பாடினவை இருபத்து இரண்டு பாடல்களாகும்.

அதனை, கந்தரனுபூதி பாடல்கள் 4, 5, 9, 10, 16, 19, 23, 24, 25, 26, 27, 29, 31, 32, 33, 34, 35, 39, 41, 45, 46, 50 முதலிய எண்களைக் கொண்டன ஆகும்.

பேறு பெற்ற ஞான நிலையிற் பாடினவை பதிமூன்று பாடல் களாகும். அதனை, கந்தரனுபுதி பாடல்கள் 8, 11, 12, 13, 20, 22, 28, 30, 38, 42, 43, 44, 49 முதலிய எண்களைக் கொண்டன ஆகும். உபதேசப்பாடல்கள் - நெஞ்சுக்கும் உலகுக்கும் உபதேசம் கொண்ட பாடல்கள் மூன்று ஆகும். அதனை, கந்தரனுபுதி பாடல்கள் 7, 14, 7 முதலிய எண்களைக் கொண்டன ஆகும். மேலும், திருத்துருத்தி என்னும் தலத்தில் இறைவன் தனது அநுபுதியைப் பாடு என்ற கட்டளையிட்ட பின் ஆறுபுதிப் பாடல்கள் சில பாடப்பட்டிருக்க லாம். அதனை

''வேசையர் மயல் மேலாய்
வெடுக்கெடுத்து மகாயிணி மேலிட
முடக்கி வெட்கு மகாமதவீணண
மினற் பொலிப்பத மோடுற
வேயருள் புர்சூவாயே''

(திருப்புகழ் 850)

என்னும் பாடலடியால் அறிய லாம்.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய செந்தில் நீரோட்டக் கயமக அந்தாதி: அந்தக்கவி - வீரராகவ முதலியார் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்: விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்: செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்: திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்: தமிழ் திருப்போரூர்ச் சந்நிதி முறை: கச்சியப்ப முனிவர் அருளிய தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதிர் சுப்பிரமணிய தம்பிரான் அருளிய தணிகைத் திருவிருத்தம்: தணிகை நந்நிதிமுறை: இந்நூல்களினின் றும் பொறுக்கிய சிலபாடல்கள் - ஆக பதினெட்டாம் நூற்றாண் டோடு நிறுத்திய - முருகன் பதினோராந் திருமுறை என்று

நன்று சேர்த்து அச்சிடலாம் அல்லது அவ்வவ்வடியார்கள் மனப்பான்மையின்படி அவரவர் மனதுக்கு உகந்தனவாய்ப் பின்னர் எழுந்துள்ள பல உண்மை அடியார் பாடல்களினின்றும் பொறுக்கிச் சேர்த்தும் பதினோ ராம் திருமுறை அமைக்கலாம்.

முருகன் அடியார் சரித்திரர் களைச் சேயத்தொண்ட புராணம் என்ற பெயருடன் தேனூர்ச் சொக்கலிங்க பிள்ளை என்னும் ஒரு வரகவி பாடியுள்ளார். மந்திர நூலாகிய கந்தரநுபூதி சிறந்து விளங்குகின்றது. எங்ஙனம் திருமூல நாயனார் ஆயின் உடலிற் புகுந்த பின்பு திருமந்திரம் பாடினரோ அங்ஙனம் அருணகிரியார் கிளியின் உடலிற் புகுந்த பின்பு கந்தரநுபுதி பாடினார் சுவாமிகள் கிளியான பின்பு அந்தக் கிளி பாடினது கந்தர நுபூதியென்பது பெரியோர் கொள்கை கந்தரநுபூதி சொன்ன கிளி - நீ பிடிக்க எய்துமோ? என்பது இலஞ்சி முருகன் உலா கண்ணி 205) - ஆனா பொருள் வழ ஆயுமிடத்துக் கந்தரலங் காரத்தைப் பற்றிக் கூறியது போல கந்த ஏறுபூதியும் அப் போதைய நிலைக்கும் ஞான நிலைக்கும் ஒத்தவாறு தனித் தனிப் பாடிய பாடல்களின தொகுதியாகும் எனறு தோன்று கின்றது. எப்படியும் கந்தரலங் காரத்துக்கு முன்அநுபூதிச் செய்யுள் கள் பல பாடப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கந்தரலங் காரச் செய்யுள்கள் பக்தி பெரிதும் ஊறி முருகன் திருவருள் பெரிதும் நிரம்பித் ததும்பிவழியும் காலத்திற்பாடப்பட்டனவாய்த் தெரிகின்றன. பின்னும் உலகுக்கு உபதேச வகையிற் கந்தரலங் காரத்தில் பத்தொன்பது பாடல் கள் உள்ளன. ஆனால் கந்தரனு பூதியில் உலகுக் உபதேசப் பாடல் மூன்றே பதினேழாவது பாடல் உளதென்னலாம். மேலும் அநுபூதி 51 பாடங்களில் சாந்தி பெறாது கலக்க முறு நிலையில் பாடப் பட்டவை. 22 பாடல்கள் அலங்காரத்திலோ தன் குறை கூறலட, நெஞ்சோடு கிளத்தில் பிராத்தனை என்னும் தலைப்புக் களில் நூற்றில் முப்பது ஒரு பாடல்கள்தான் உள: ஏனை யவை யமண வெருட்டல், பிரமனை வெருட்டல், அற்புத மாலை, ஆனந்த மாலை, கோளாறு பதிகம், கவசப்பதிகம் என்னும் பலவகைய உயர்நிலைப் பாடல் களாயுள்ளன. கந்தரநுபூதியற் பல பாடல்கள் தம்குறை கூறு வனவும், தாம்பெற்ற பேற்றை நினைந்து மகிழ்வனவுமாய் எல்லாம் தன்மை உள்ளன. ஆகவே பல குறைகளுக்கும் ஆளாய் உள்ள நம் முருகனைப் போற்றி உய்வதற்கு - நித்திய பாராயண நூலாகக் கொள் வதற்கு - மிகப் பொருத்ததமான நூலகக் கந்தரனுபூதி திகழ் கின்றது. நூலின் பொருட்

சிறப்பு மிக மிகப் பெரியதாம். அச்சிறப்பை உணர்ந்த தாயுமான சுவாமிகள்

''கந்தரநுபூதி பெற்று கந்தரநுபூதி சொன்ன எந்தை யருள் நாடியிருக்கு நாள் எந் நாளோ'' என வியந்து போற்றி னார். ஆறுபுதியின் தண்ணிய நடையையும் செவ்விய பொருளையுங் கண்ணோடு பல்லாண்டுகளாகப் பெரியோர் இந்நூலைப் பாராயண நூலாகக் கொண்டு பலனைந்து வரு கின்றனர். செய்யுள் ஒன்றல் ஆடும் பரி வரிகள் உண்டு. அதில் முதல் இரண்டு அடிகள் போலும் மயிலும் துணை என்னுந் திருமந்திரம் மறைப்பொருளாயிருக்கின்றது. அது எங்ஙனம் என விளக்கு வாம். ''ஆடும்பரி வேல் அணி சேவலெனப் பாடும் பணியே பணியாக அருள்வாய்'' என்பது முதலிரண்டடி, ஆடும் பரி ஸ்ரீ மயில்'' அணி ஸ்ரீ அழகிய, சேவல் ஸ்ரீ துணை: சேவல் என்னும் சொல்லுக்குத் துணை, காவல் எனப் பொருள் உண்டு. கந்தரந்தாதியல் உயிரிச் சேவலுக் கே (15) என வரவதையும் காண லாம் மேலும் மயிலும் அழகிய துணையாம் எனப் பாடும் பணி: பாடும் பணி என்பது பணி: பாடுதல் ஸ்ரீ கூறுதல், சொல்லுதல் ஆகவே வேலும் மயிலுந் துணை'' என்று கூறும் பணியே எனக்குப் பணியாக அமைய அருள்வாய் என்பது பிராத்தனை மயிலை முன்பு கூறி வேலைப் பின்பு கூறியது - சிவாயநம் - நமசிவாய என்பது யோல ''மயிலையும் அவன் திருக்கை அயிலையும்'' எனவரும் கடை கணியல் வகுப்பு ஈற்றடியையும் இங்கு உணரலாம் எனது கல்வி யையும் அறிவையும் இறைவன் பெறுமாறே செல விடுகிறேன் என்றார். அதனை யாமோதிய (கந்தரனபூதி 17)

என்றும்

''எனனை நன்றாக இறவைன்
படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ்ச்
செய்யுமாறே''

## முடிவுரை

பக்தியின் அடிப்படையில் தோன்றிய இலக்கியங்களும் அடியார்களின் படைப்புகளும் திருமறைகளுக்கு ஆதாரமாகக் கொண்டு பத்துத் திருமுறை களைத் தொகுக்கும்படி சரி நிமித்தப் படலாம். இவ்வாய்வு கட்டுரை எதிர்கால முருகவேலின் அடியார்களுக்கு ஊன்று கோலாய் பயன்விளைவிக்கும்.

✵

பொறுமையால் ஆயிரம்
முறை கூட தோற்று
இருக்கலாம். ஆனால்
அவசரத்தால் ஒருமுறை கூட
ஜெயித்திருக்க முடியாது.

# காந்தியடிகளும் லியோடால்ஸ்டாயும்....

பா. சிவரஞ்சனி




**தே**டிச் சோறு நிதம் தின்று
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிகு உழன்று
பிறர் வாடப் பலசெயல்கள் புரிந்து
நரைக் கூடி கிழப்பருவம் எய்தி
கொடுங்கூற்றுக்கு இரையெனப் பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போல
நானும் வீழ்வேன் என்று நினைத்தாயோ!

முண்டாசுக் கவிஞனின் வரிகளை முன்னிருத்தி
எனக்கு தமிழூட்டி வளர்த்த என் தமிழ் தாயினை
வணங்கிக் கட்டுரையை துவங்குகிறேன்.

சோடாவுக்கா அத்தனை சக்தி?
கைத்தடிக்குள்ளா அத்தனை வீரியம்?
வெள்ளைக்காரர்களை கதிகலங்க விரட்டியது
அந்தக் கிழவனா?
வெளிநாட்டு அறிஞர்கள் புகழ்வது அந்த
அரை நிர்வாண பக்கிரியையா?

ஆம்,

சத்தியத்தை தவிர வேறொன்றும்
தெரியாத அந்தச் சத்தியமூர்த்திக்கு
விருப்பம் எல்லாம் ஒன்றுதான்
அது விடுதலை மீதுதான்!

மூன்று கடல் முழுங்கிய தண்ணீர்,
முழு மலையின் நீள் அகங்கள்,
சூழ்ந்து நிற்கும் எவரெஸ்டின் உயரங்கள்
இவையனைத்தும்,

காந்தி என்ற கம்பீரக்கிழவனின்
காலடிக்கு கீழேதான்!

யார் அந்த டால்ஸ்டாய்? இவருக்கும் காந்தியடிகளுக்கும் என்ன ஒற்றுமை? என்று என்னு கையில்தான்... ஏன் காந்தியை ஈர்த்த ஒரு மாமனிதரைப் பற்றி படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

நம்மில் சிலருக்கு டால்ஸ் டாயினைப் பற்றிச் சிறிது தெரியும். உலக புகழ்ப் பெற்ற எழுத்தாளர், ரஷ்ய நாட்டினைச் சார்ந்த அறிஞர் 'போரும் அமைதியும்' போன்ற உலகப் புகழ்பெற்ற நூல்களை எழுதி உலக சரித்திரத்தில் இரவாத இடம் பிடித்தவர், வரலாற்றில் தடம்பதித்தவர் என்றே பலருக்கும் தெரிந்திருக்கும்.

நாம் அறிந்த செய்திகள் ஒருபுறம் இருக்க, நாம் அறியாத பல செய்திகள் பற்றியே இக் கட்டுரையில் குறிப்பிட விரும்பு கிறேன். அவை என்னவென் றால்... காந்தியின் அறவழிப் போராட்டங்களுக்கு தூண்டு தலாக ஒரு வழிகாட்டியாக இருந்தவர் லியோ டால்ஸ்டாய் என்பதே ஆகும்.

ஆம்! காந்தியின் அகிம்சை கொள்கைகள் ஆகட்டும், அற வழிப் போராட்டங்களாக இருக் கட்டும் அவற்றுக்கு அடிப்படை யாக இருந்தது. டால்ஸ்டாயின் படைப்புகளும் சிந்தைகளுமே ஆகும்.

ஆம். அன்று அவன் அரை யாடையை உடுத்தியதால்தான் இன்றும் பாரதமாதாவால் ஆறு முழ சேலையை உடுத்த முடிகிறது.

'பாபு ஜூ', 'தேசத் தந்தை' என்றெல்லாம் அன்புடன் அழைக்கப்படுபவர் நம் காந்தியடிகள். நம்மில் அனேக மாக அனைவருக்கும் காந்தி யினைப் பற்றித் தெரிந்து இருக்கும். இந்தியாவின் விடு தலைப் போராட்டத்தை அற வழியில் கொண்டு செலுத்தி இந்திய விடுதலைக்கு பாடு பட்டவர் மகாத்மாவை பற்றி பல விதமான கருத்துக்கள் நம்மிடை யே நிலவினாலும் இந்திய வரலாற்றில் ஏன் உலக வரலாற்றிலும் நிலைத்து நின்று விட்ட ஒரு மாமனிதர். அகிம்சை, ஒத்துழையாமை இயக்கங்கள் என்ற வன்முறைக்கு மாற்றாக போராட்ட வழிமுறைகளை செயல்படுத்தி காட்டிய ஒரு மனிதர்.

அவரின் பிறப்பு, இளம்வயது, கல்வி, கனவு என அனைத்துமே பெரும்பாலானோருக்கு தெரிந்து இருக்கும். ஆனால், தென்னாப் பிரிக்காவில் இந்தியர்களுக்காக (தென்னாப்பிரிக்க வாழ் இந்தியர் கள்) கட்டிய ஆசிரமத்திற்கு 'டால்ஸ்டாய் பண்ணை' என்று பெயர் வைக்க காரணம் என்ன?

1890 செப்டம்பர் மாதத்தில் லண்டனில் வெளிவந்த இல்ல ஸ்ட்ரேடர் நியூஸ் வீக்லீ என்ற பத்திரிகையில் டால்ஸ்டாய்

எழுதிய 'இந்துவுக்கு ஒரு கடிதம்' என்ற நீண்ட கட்டுரை காந்தியார் கவனத்திற்கு வந்தது.


**டால்ஸ்டாய் அந்தக் கட்டுரையில் எழுதியது**

ஒரு வியாபாரக் குழு 20 கோடி மக்கள் உள்ள ஒரு நாட்டை அடிமைப்படுத்தி விட்டது. என்ன நடந்தது என்றால் 30,000 பேர் பலசாலிகளாக இல்லை. எலும்பும் தோலுமாக இருந்தவர்கள். ஆனால் 20 கோடி மக்களை அடக்கிவிட்டார்கள் என்றால் அது அந்நியர்

காந்தியின் உள்ளே ஒரு மாபெரும் தாக்கத்தினை உண் டாக்கியது. அதிலிருந்து டால்ஸ்டா யுடன் காந்தி கடிதங்கள் மூலம் அவரின் கருத்துக்களை பகிர்ந்து கொண் டார்.

டால்ஸ்டாய் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல. தனது சிறு வயதில் நாத்திகராக இருந்த அவர் பிற் காலத்தில் வாழ்வின் அர்த்தத் தினைக் கண்டு கொண்டு ஒரு மாபெரும் ஆன்மிகப் போராளி யாகத் திகழ்ந்தவர்.

இறைவன் அன்பாகவே இருக்கின்றார் என்பதையும் பிற



களின் சாமார்த்தியமல்ல, இந்தியர்கள் தம்மையே அடிமை யாக்கிக் கொண்ட நிலைமை தான். இதைப் படித்துவிட்டு டால்ஸ்டாய்க்கு கடிதம் எழுதி அவரின் அனுமதியை பெற்று கட்டுரையின் மொழி பெயர்ப் பை வெளியிட்டார். அப்படிப் பட்ட டால்ஸ்டாயின் கருத்துக் களும், நூல்களும்தான் காந்தியை கவர்ந்தன. டால்ஸ்டாய் எழுதிய 'பரலோக இராஜ்ஜியம் உன்னுள் இருக்கின்றது' என்ற நூல்

மக்களுக்கு உதவி செய்வதிலேயு மே வாழ்வானது அடங்கி இருக் கின்றது என்பதையும் அறிந்து கொண்ட அவர் மற்ற சமயங்கள் கூறும் கருத்துக்கள் யாவை என்பதையும் அறிந்து கொள்ள அச்சமய நூல்களை ஆராய்ந்தார். இறைவன் அன்பாகவே இருக் கின்றான் என்கின்ற பொழுது ஒரு மனிதன் மற்றொரு மனித னுக்கு எக்காரணம் கொண்டும் தீங்கு விளைவிக்க கூடாது

என்பதை உணர்ந்திருந்தார். அதுபோல, இயேசுநாதர் கூறிய ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டுக என்பதனைப் போல் ஒரு மனிதன் தீமையை வன்முறையால் வெல்ல இயலாது. அன்பினால் வெல்ல வேண்டும் என்றும் கூறி அதை நடைமுறைப்படுத்தினார்.

அவ்வாறு, அவர்கள் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளும் போதுதான் காந்திக்கு டால்ஸ்டாய் திருக்குறளை அறிமுகம் செய்து வைக்கின்றார். அவருக்கு இந்தியா என்றால் ஒரு தேசம். அங்கே இருந்தது ஒரு மதம். அது இந்து மதம் என்றே தான் தெரியும். அதனால் தான் காந்திக்கு அவர் கடிதம் எழுதுகையில் 'இந்துக்கு ஒரு கடிதம்' என்றே எழுதுகின்றார்.

அக்கடிதத்தில் மக்களைப் பற்றியும், உலக சமயங்களைப் பற்றியும், இந்தியாவைப் பற்றியும் அவர் காந்தியிடம் பேசுகின்றார். மேலும், குறிப்பாக அன்பினைப் பற்றியும் பேசுகின்றார். அவ்வாறு பேசும்போது திருக்குறளில் இருந்து சில குறள்களை எடுத்துக் காட்டாக காட்டியே அவர் பேசுகின்றார். பிறருக்கு தீங்கு விளைவிக்க கூடாது என்பதனைப் பற்றி பேசும்போது, 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில் இருந்து சில குறள்களை அவர் மேற்கோள்களாக காட்டுகின்றார்.

இதன்மூலம் தமிழர்களின் பெருமைக்குரிய நூலான திருக்குறளின் சிறப்பைப் பற்றி அரியமுடிகிறது. திருக்குறள் உலகப்பொதுமுறை என்று அழைக்கப்படுவதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இதுவே ஆகும்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை அதன் மொழியிலேயே படிக்க வேண்டும் என்பதற்காகவே காந்தியடிகள் தமிழ் மொழியை கற்றார் என்பதை அறியும்பொழுது தமிழர்களான நாம் பெருமை கொள்ளவேண்டும்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியார் வழிநின்று தமிழர்கள் அவருடைய போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆனால், காந்தியார் டால்ஸ்டாய் அவர்களின் வழிநின்று அறவழியில் தென்னாப்பிரிக்க இந்தியர்களை பாதுகாக்க 'டால்ஸ்டாய் பண்ணை' என்னும் ஆசிரமம் தொடங்கி அவருக்கும் டால்ஸ்டாய்க்கும் இடையே உள்ள உறவை மட்டுமின்றி இந்தியா - தமிழ் - ரஷ்யா இடையே உள்ள உறவையும் எடுத்துக்காட்டினார்.

எனவே, கதர், காந்தியடிகள், காந்தியம் என எதையும் மறக்காமல், மறுக்காமல் சான்றோர் வழிநின்று நாமும் நம் தேசத்தினை காக்க வேண்டும்.

***ஜெய் ஹிந்து!***

# எதிர்காலத்துப் போர்கள்

**தமிழரசி பற்குணன்**

***அ***றிவியல் கண்டுப்பிடிப்புகள் பலவும் இராணுவத்தை முன்நிறுத்தியே கண்டுபிடிக்கப் படுகின்றன. இன்று உலகம் தன் ஆளுகையில் வைத்திருக்கும் இன்டர்நெட்டும், மொபைலும் முதலில் இராணுவத்துக்காகவே கண்டுபிடிக்கப்பட்டவைதான். அப்படியிருக்கும்போது எதிர் காலத்தில் போர் என்பது எப்படி யிருக்கும் என்று விஞ்ஞானிகள் சில ஆயுதப் பட்டியல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில் முதன்மையானது 'அட்டனாமஸ் வெப்பன்ஸ்' என்பது. இது ஒரு ரோபோ. இதன் காலில் பல் சக்கரம் பொருத்தப் பட்டிருக்கும். கையில் மெஷின் கன் இருக்கும். சென்சார்கள் மூலம் எதிரிகளைச் சுட்டுக் கொல்லும். யாரிடம் ரோபோவின் சிக்னல் களுக்குப் பதில் சொல்லும் டிரான்ஸ்பாண்டர் இல்லையோ அவர்கள் எல்லோருமே எதிரிகள் தான். அது சாதாரண பசுமாடாக இருந்தாலும் சுட்டுத் தள்ளும். சமாதானத்துக்காக வெள்ளைக் கொடி காண்பித்தாலும் அதற்கு ஒன்றும் தெரியாது. தனது சிக்னலுக்குப் பதில் இல்லை என்றால் கொன்று போட்டு விடும்.

இதற்கடுத்து'ஹை எனர்ஜி லேசர்ஸ்' என்ற லேசர் ஆயுதம் ஒரு பெரிய சிவப்பு விளக்குதான் இதன் ஆயுதம். இதில் இருந்து கிளம்பும் அடர்த்தியான லேசர் கதிர்கள் பல நூறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும். இலக்கை பஸ்பமாக்கும் விமானம், ஏவுகணைகளை வானிலேயே எரிக்கவும், விமானத்தில் இருந்து தரைப் பகுதிகளைத் தாக்கி அழிக்கலாம். இப்போது லேசர் விமானத்தை அமெரிக்க தயாரித்துக் கொண்டு இருக்கிறது. நேர்க் கோட்டில் செல்வது மட்டும் தான் லேசரின் பலவீனம். இரண்டு பல்டி அடித்தபடியே இதில் இருந்து தப்பித்து விடலாம்.

மூன்றாவதாக வருவது 'ஸ்கைஸ்டேஷன்' ஒருநாட்டின்

எல்லையில் படைகளைக் குவித்தால்தானே பரிச்சினை வரும். வானத்தில் குவித்து விட்டால்? விண்வெளியில் மிதக்கும் ஆயுதக்கிடங்குகளை அழிப்பதுதான் வல்லரசுகளின் அடுத்த புராஜக்ட். எதிரிநாட்டின் மேலே பறந்தபடி பயமுறுத்த லாம். எதிரி நாட்டின் ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல்களை எளிதாக அழித்துவிடலாம்.

மறித்து அழிப்பது சுலபமான வேலையல்ல.

அதற்கடுத்து மக்களைக் கொல்லக்கூடிய ‘மைக்ரோவேல் பிம்’’ கொத்துக் கொத்தாக மக்களைக் கொல்ல வேண்டுமா? இந்த ‘மைக்ரோவேள் பிம்’ போதும்.03 மீட்டர் அகலம் கொண்ட வெளிச்சக் கத்திகள் இதிலிருந்து பாயும். ஆரம்பத்தில்



நான்காவதாக ஹைபர்சானிக் கிராப்ட். இது ஓர் ஏவுகணை வகையறா ஒலியின் வேகத்தில் பயணித்தால் அது சூப்பர்சானிக். இப்போது உள்ள ஏவுகணைகள் எல்லாமே ஒளியின் வேகத்தில் செல்பவைதான். ஒலியைவிட ஐந்து மடங்கு வேகத்ததில் பயணித்தால் அது ‘ஹைபர் சானிக்’ எனப்படும் உலகின் எந்த இடத்தையும் இரண்டே மணி நேரத்தில் இந்த ஏவுகணை மூலம் தகர்க்கலாம். இந்த அதி வேக ஏவுகணைகளை வழி

சுருக் சுருக்கென்று குத்தும். தொடர்ந்து இப்படிக் குத்தும் ஒளிக்கற்றை முரட்டு இரும்பை யே உருக்கிப் போட்டுவிடும்.

சாதாரண மனிதன் எம் மாத்திரம். இதில் இருந்து தப்ப வேண்டுமா? ‘பீம் டார்கெட்’ செய்ய 5 விநாடிகள் எடுத்துக் கொள்ளும். அதனால் 5 விநாடிக்கு மேல் ஓரிடத்தில் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

மனித இனத்துக்கு எதிரி வெளியில் இல்லை. அது மனிதனேதான்.

# மக்கள் தலைவி ஜெ.ஜெயலலிதா
## நூலை வெளியிட்டார்
## தமிழ் வளர்ச்சி அமைச்சர்
# க.பாண்டியராஜன்

**த**மிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் துணை யுடன் சென்னை மேற்கு சைதாப்பேட்டை அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில், தமிழ்த்துறையும், சாய்விஜி கல்வி மருத்துவ அறக் கட்டளையும் நடத்திய தமிழ் வளர்ச்சி விழா மற்றும் நூல்கள் வெளியீட்டு விழா 25.09.2018 அன்று நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு க.பாண்டியராஜன் அவர்கள் கலந்து கொண்டு, மக்கள் தலைவி ஜெ.ஜெயலலிதா என்னும் நூலையும் தமிழ் வளர்ச்சித் துறை மூலம்' சிறந்த நூல்கள் வெளிவர உதவிடும் நிதியுதவித் திட்டத்தின் மூலம் நூலாக்கம் பெற்ற ''தமிழ்ச் சமுதாயத்திற்குத் திரைப்படப் பாடல்களின் பங்களிப்பு'' என்ற நூலையும் வெளியிட்டு, இருநூல்களையும் எழுதிய நூலாசியர் முனைவர் வேணு புருஷோத்தமன் அவர் களைச் சிறப்பித்தார்கள்.

இளைஞர்களிடையே தமிழறிவு, உலகளாவிய தமிழ்ச் சங்கங்களின் செயல்பாடுகள், அயல்நாட்டினரின் தமிழ் மொழி மீதான அக்கறை, தமிழ் மொழி யில் அதிகமான எண்ணிக் கையில் நூல்கள் பதிப்பிக்கப் பட்டு வருவது குறித்தெல்லாம் மிக விரிவாக மாண்புமிகு அமைச்சர் க.பாண்டியராஜன் அவர்கள் பேசினார்கள்.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் மற்றும் இயக்குநர் முழுக் கூடுதல் பொறுப்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை பேராசிரியர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள், ''தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்குத் திரைப்படப் பாடல்களின் பங்களிப்பு'' என்ற நூலைப் பெற்றுக்கொண்டு மாணவர் களிடையே தமிழ் மொழி, தமிழ்ப்பற்று, தமிழில் கற்க வேண்டிய அவசியம் மற்றும்

தமிழ் வளர்ச்சித்துறை ஆற்றி வருகின்ற பணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் மாணவர்களிடையே தமிழை வளர்ப்பதற்காக நடத்தப்படு கின்ற போட்டிகள், பயிற்சிப் பட்டறைகள் குறித்து உரை யாற்றினார்.

கல்லூரியின் நிறுவனர் டாக்டர் ச.தேவராஜ் அவர்கள் ''மக்கள் தலைவி ஜெ.ஜெயலலிதா'' என்ற நூலைப் பெற்றுக் கொண்டு, விழா தலைவர் உரையாற்றி னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்தாம் வகுப்பில் உயர் மதிப்பெண்கள் பெற்ற பல பள்ளிகளைச் சேர்ந்த மாணவர் களுக்கு ஊக்குவிப்புத் தொகையும் சான்றிதழும் வழங்கியதோடு, தமிழ்ப்பணி ஆற்றுவோருக்கான ஔவை விருதினை முனைவர் மோ. பாட்டழகன், இயக்குநர் கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கன் தமிழாய்வு மையம் அவர்களுக்கும், அன்னை வேளாங்கண்ணி தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியை இராணி பிரகாஷ் அவர்களுக்கும் வழங்கினார்.

மேலும் தொழுநோய் ஒழிப்புத்துறையில் பணியாற்றி வர்களும், எய்ட்ஸ் நோய் தடுப்புத்துறையில் பணியாற்று பவர்களும் அமைச்சர் அவர் களால் சிறப்பிக்கப்பட்டார்கள்.

நூலாசிரியர் வேணு. புருஷோத்தமன் வரவேற்புரை வழங்க, பேராசிரியை இராணி பிரகாஷ் நன்றி கூறினார். விழாவில் கல்லூரியின் துணைத்தலைவர் கல்வியாளர் டெல்பின்தேவ ராஜ், செயலர் டாக்டர் தேவ் ஆனந்த், கல்லூரி முதல்வர் டாக்டர் அனிதா இராஜேந்திரன், அறக்கட்டளை இயக்குநர் கே.எஸ்.விஜயகுமாரி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பேராசிரி யர் நா.சுலோச்சனா, கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கன், உதவிப் பேராசிரியர் முனைவர் கு.சக்திவேல், விழுப்புரம் அரி.பன்னீர்செல்வம், துரை. மணிவண்ணன், ஆல்பா கலைக்கல்லூரி பேராசிரியர் சங்கர், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

நம் வாழ்க்கையென்ற புத்தகத்தில் முதல் பக்கம் கருவறை. கடைசி பக்கம் கல்லறை. இடையில் இருக்கும் பக்கங்களைப் புன்னகையில் நிரப்புவோம். கண்ணீரால் நனைக்காமலிருப்போம்.

# திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

**முனைவர் வெ.ஷீலா**
உதவிப்பேராசிரியர்,
நீதிபதி பஷீர் அகமது, சயீது மகளிர் கல்லூரி
சென்னை - 18

மனித மனம் வளமடைய வேண்டுமானால் புற ஒழுக்க மும் அகவொழுக்கமும் இன்றி யமையாததாகும். புற ஒழுக்கம் சுற்றுச்சூழலை பாதுகாக்கும். அகவொழுக்கம் தனி மனித சமூக இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் என்பதை அருளா ளர்களின் திருமுறைகளில் உய்த்துணர முடிகிறது. நீருக்கு ஆதாரமான வான்மழையின் சிறப்பினை பாடுகையில்

அமுதூறு மாமழை நீர தனாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றம்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாகுவே

இயற்கை வளம் கொழிக்க மழை தேவை. மரங்களே மழையைத் தருவிக்கின்றன. பயன் தரும் மரங்களாக பாக்கு மரம் தென்னை மரம் கரும்பு வாழை போன்றவை ஓங்கி செழித்து வளரும் என்று கூறியவர் பயன் தரும் மரங்களை மட்டும் வளர்த்து காட்டு மரங்களை அழித்துவிடக் கூடாது. அதில் மழையைத் தரும் மறைமுகப் பயன் உண்டு. அவ்வாறு மரங்களை வளர்க்க வில்லையென்றால் மழை இல்லாமல் பூமி காஞ்சிரகாய் போல் துன்பம் தந்து வறண்டு போகும் என்று காஞ்சிரை ஆங்கதுவாமே என்று கூறுகிறார் திருமூலர். மேலும் இயற்கை பாதுகாவலராகி

கரகத்தால் நீராட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தால் நிற்றிரோ நன்நெஞ்சி னீரே

என்று தொலைநோக்கு பார்வையுடன் இயற்கையைப் பேண மரங்களை செடி கொடிகளை வளர்க்காதவர்கள்

நரகத்தை அடைவார்கள் என்று புறம் சார்ந்த ஒழுக்க நிலையை சீர்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு எச்சரிக்கிறார்.

மனிதர்கள் அகவாழ்க் கையில் மேம்பட வேண்டு மானால் ஒழுக்கத்தை கடை பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமுதாயம் நல்வாழ்வு பெறும் என்பதை பசியாற்றல் அறியாமையை அகற்ற வேண்டும் மன மாசுக்களை நீக்குதல். பக்குவம் பெற்ற மனம் பற்றற்று இருக்கும் வீண் பெருமை கூடாது செல்வம் நிலையாமை பிறர்மனை நோக்காமை பொய்மை மகளிர் நிலை ஒழுக்கம் அற்றோர் சேர்க்கும் செல்வம் பயனற்றது.

ஒழுக்கம் அற்றாருக்கு உதவுதல் கூடாது போன்ற தனிமனித ஒழுக்க நிலையை கூறும் நிலையில் மரங்கள் பறவைகள் விலங்குகள் கனிகள் நீர்நிலைகள் படகு என இயற்கைச் பொருள்களைக் கூறி எடுத்துரைக்கின்றடர்.

## பசியாற்றுதல்

மனிதர்களின் தலையாய அறம் என்பது பிறருக்கு உணவு இட்டு உண்பதே சிறந்தது என்று கூறுகையில் காக்கைளை உதாரணமாக்கி

ஆர்க்கும் இடுமின் அவர் இவர்
என்னன்மின்

பார்த்திருந்து உண்மின்
பழம்பொருள் போற்றன்மின்

காக்கைக் கூட உணவு உண்ட போது எல்லாக் காக்கை களையும் விரைந்து அழைத்து பகிர்ந்துண்ணுகிறது. மனிதனும் அவ்வாறு தனித்து உண்ணாமல் பிறருக்கு அளித்துவிட்டுதான் பசியாற வேண்டும் இதுவே சிறந்த அறம் என்கிறார். மேலும்

அவ்வியம் பேசி அறங்கெட
நில்லன்மின்

செவ்வியனாகிப் பிறர் பொருள்
வவ்வலமின்

என்று கூறிப் பிறர் பொரு ளைக் கவர எண்ணக் கூடாது. செம்மையான வாழ்வு வாழ வேண்டுமானால் உண்ணும் போது வருவோர்க்கு ஓர் அகப்பை உணவு கொடுத்த பின் உண்ண வேண்டும்

யாவர்க்குமாம் இறைவனார்க்கு
பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக்கொரு
வாயுறை

யாவர்க்குமாம்
உண்ணும்போதொரு கைப்பிடி


மனிதன் பின்பற்றக்கூடிய எளிமையான அறத்தை கூறு கிறார். மனித இனத்திற்கு மட்டு மல்லாமல் பிற உயிரினங் களுக்கு உணவிடுதல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.

அறியாமையை அகற்ற வேண்டும்.

மனிதர்கள் அறியாமையில் திளைக்கின்றனர். இவற்றை அகற்றினால் மனம் தூய சிந்தனைப் பெறும் என்பதை

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை

எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்



இவ்வாறு கூறுகின்றார். மக்கள் வெல்லக்கட்டியும் தேனும் கனியும் உண்ணத் தெரியாமல் எட்டிக்காய்க்கு ஆசைப்பட்டு அவதிப்படுகிறார் கள் என்று அவர்தம் அறியாமை யைச் சுட்டுகின்றார்.

அறியாமை என்னும் கோட்டானும் காம இச்சை என்னும் பாம்பும் தர்மம் என்கிற கிளியுடன் அதர்மம் என்கிற பூனையும் சிற்றறிவுடைய நாகணவாய்ப் பறவையும் வஞ்சமிக்க காடையும் ஆகிய இவை அனைத்தும் மனித உடம்புக்கு நடுவேயுள்ள மனத்தில் குடிகொண்டுள்ளன. நாகணவாய்ப் பறவையான சிற்றறிவை அறியாமையாகிய கோட்டான் அழிக்க நெருங்கும் போது கோட்டானை விரட்ட சுண்டெலி ஒலியெழுப்பி நா கணவாய்ப் பறவையை எச்சரித்து கோட்டானிடமிருந்து காப்பாற்றும் எலி இங்கு ஆருயிரைக் குறிக்கின்றது. பரம்பொருளைத் துணையாகக் கொண்டால் அறி யாமையென்னும் கோட்டானை விரட்டி அருள் ஞானம் பெற வேண்டும் என்பதை தெளிவு படுத்த பறவை இனங்களைச் சுட்டி எளிமையாக தெளிவு படுத்துகிறார்.

## மன மாசுக்களை நீக்குதல்

நீர்குளத்தில் பாசி படிந்திருப் பதைப் போல ஆருயிர்களின் மனமாகிய குளத்தில் போட்டி பொறாமை காமம் வெகுளி என்னும் மாசுகள் மண்டிக் கிடக்கின்றன. இந்நிலையில் சீவன் ஐம்புலன் வழிச் செல்லும் இச்சைகளை நுகர்வதையே உயிருக்கு கொண்டு வாழ்கிறது. மனித உயிர் நல் வழிப்பட மன உறுதி திடசித்தம் என்னும் சிவனருள் துணை செய்ய ஆருயிர் ஆசை வழிப் பாசம் அழுக்குகள் அகன் றொழியும். மன அழுக்குகளை நீக்க வேண்டுமானால் இறைச் சிந்தனையில் மனதில் வைத்து

இரவும் பகலும் இடைவிடாது உருக வேண்டும். அப்போது பாறைக் கல் போன்ற ஆணவ இருள் அகன்று சிவக்காட்சி தோன்றும். அழுக்கடைந்த துணிகளின் அழுக்கை நீக்க உவர் மண்ணைக் கொண்டு துவைத்து வெளுப்பது போல ஆன்மாக்கள் ஆசையை விட்டொழித்து வெளிவர அவைகளுக்கு ஆசையை ஊட்டுகிறார் திருமூலர். மேலும் ஆன்மாவைப் பற்றும் ஆணவம் மாயை கன்மம் என்னும் வலிமை மிக்க மும்மலங்களும் முளைகின்ற விதையும் அதை மூடியிருக்கும் உமியும் போன்றதாகும். ஆருயிர்களை மூடியிருப்பதால் ஆன்மா சிவனோடு சேராமல் தனித்து இருக்கும். எனவே பாசப்பிணைப்பை விட்டொழித்து பரம்பொருள் திருவடியை போற்றி வழிபட வேண்டும். இவ்வாறு மனித மனங்களை சீர்குலையச் செய்யும் அழுக்குகளை நீக்க வேண்டும் என்பதை வலியுறுத்த இயற்கைச் சார்ந்த பொருள்களை கூறியிருப்பது அதன் அழுத்தத்தை உணர்த்துகிறது.

மனமானது அறிவின் ஏவலுக்கு அடங்காது அவைதம் இச்சைப்படி இன்பம் நுகர்ந்து உடல் அழியக் காரணமானதை யானைகள் அங்குசத்திற்கு அடங்காது. கரும்பு கொல்லையிலே புகுந்து தின்று கொழுத்து, கரும்புக் காட்டையே அழித்தன என்பதாக உணர்த்தி அருளினார் திருமூலர். யானையின் கழுத்தின் மேல் உட்கார்ந்து யானையை அதட்டி மிரட்டிச் செலுத்த முயன்றாலும் அந்த யானைதான் முன் சென்ற வழியில் செல்ல முடியாது. எனவே யோக பயிற்சியால் மனதை அடக்குதலே சிறப்பு என்கிறார்..

## பக்குவம் பெற்ற மனம் பற்றற்று இருக்கும்

பிறரைக் கோபித்தலும், கண்டதற்கு ஆசைப்படுவதும், தீய காரியங்களாகிய செயல்களைச் செய்வதும் உண்ணுதலும் சுவைத்து இன்புறுதலும் மற்றவர்களுக்கு தீமை செய்வதும் இல்லாததை எண்ணிக் குறைபட்டுக் கொள்ளுதலும் தம்மையே புகழ்ந்து தருக்கிக் கொள்வதும் தற்பெருமை பேசித் திரிவதும் என்ற இவையெல்லாம் இறைவனிடம் அன்பு கொண்ட பக்குவம் பெற்ற பெரியோர்களின் இயல்பு அல்ல. உயிரில் கலந்து இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை அறிந்துக் கொள்ளாமல் இருப்பவர்கள் அலைகடலில் அகப்பட்டு அங்கும் இங்கும் அலையும் மரக்கட்டை போல் அலைக்கழித்து சீரழிவர்.

## வீண் பெருமை கூடாது

வானவெளியில் பருந்தொன்று பறந்துச் செல்வதைப் பார்த்துக்

கீழே புற்றுக்குள் இருக்கிற பாம்பு அடங்கி ஒடுங்கிக் கிடப்பதைப் போல மனமே வீண் பெருமைப் பேசுவதை விட்டொழித்து விட்டு அடங்கி கிடப்பாயாக. குடிக்க இயலாத கடலுக்கு போய் சேர்ந்து நல்ல நீருடைய ஆறு கடலோடு இரண்டறக் கலந்து அடங்கி இருப்பதைப் போல நீயும் அடங்கி இருப்பாயாக. வீண் பெருமை மனித மாண்பை சீர்குலையச் செய்துவிடும் என்பதை உணர்த்த இயற்கை நிகழ்வுகளை எடுத்துக் கூறியுள்ளார் திருமூலர்.

## பிறர்மனை நோக்காமை

மனிதர்களின் வாழ்வியலை சிதைக்க கூடிய ஆற்றல் ஆசைக்கு உண்டு. எல்லாம் தனக்கே உடமையாதல் வேண்டும் என்ற பேராசையே ஒழுக்க கேடுகளின் ஊற்றாக இருக்கிறது. செல்வத்தின் மீதும் உடலின் மீதும் போகம் கொண்டவர்கள் செய்யும் ஒழுக்க கேடுகளுள் முதன்மையாக இருப்பது பிறன்மனை நயத்தல் ஆகும். இது குடும்ப அமைதியையும் சமுதாய அமைப்பையும் ஒழுங்கையும் கெடுத்து சிதைத்து விடும். இதை உணரச் செய்யும் வகையில் இயற்கைப் பொருளைச் சுட்டிக்காட்டி பிறமனைவியை அடைய விரும்பும் இளைஞர் களின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறார்.

காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்

ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றாரே

என்றும்

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை

அருத்தம் என்றெண்ணி அறையில் புதைத்துப்

எனப் பாடுகின்றார்.

## பொய்மை மகளிர் நிலை

பொய்மை மகளிர் பொருள் மீது பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் பின் சென்றால் துன்பம் மட்டுமே மிஞ்சும். இதனை

இலைநல ஆயினும்

எட்டிபழுத்தால்

என்று பொய்மை மகளிரை புல் எட்டிப்பழம் வேப்பங்காய் என்றெல்லாம் விளக்கி இவை மனிதனுக்கு ஏற்றதல்ல சீர் குலைக்க செய்யக் கூடியது என விளக்குகிறார்.

அகம் சார்ந்த இறையுணர்வும் சமூக நெறிகளும் புறம் சார்ந்த இயற்கைச் சூழலும் சேர்ந்துதான் மனித சமுதாயத்தை வளமை யுறச் செய்கிறது. தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுங்கை நாளும் வளர்த்துச் செம்மையுறச் செய்யும் வகையில் இயற்கைச் சார்ந்த பொருள்களை பறவை களை விலங்குகளை முன் னிறுத்தி கூறப்பட்டுள்ளது.

❍

# மானம்வரின்...!

**எழுத்தாளர், எஸ்.பி. பாமா**
கோலாலம்பூர்



பிரமாண்டமான அந்தப் பேரங்காடியின் நுழைவாயிற் கதவு திறந்து கொண்டதுமே, குளிர்சாதனம் அள்ளிவீசிய குளிர்ச்சி சண்முகத்திற்கு இதமாக இருந்தது. இவ்வளவு நேரம் தாங்கமுடியாத வெயிலின் உக்கிரத்தில் தொப்பையாகிப் போயிருந்தவரின் தேகம்... ஜிலு ஜிலுவெனப் பரவிய அந்தக் குளிரினால் சிறிய புத்துணர்ச்சி பெற்றவராய் மெய்மறந்து சிறிது நேரம் நுழைவாயின் ஓரத்தில் நின்று இளைப்பாறினார்.

கடுகடுவென்ற முகத்துடன் பாதுகாவலன் ஒருவன் சண்முகத்தை முறைத்துப் பார்க்க தன்னை சுதாரித்துக் கொண்டு மெதுவாக கவுன்ட்டரை தாண்டி உள்ளே நுழைந்தார்.

வெய்யிலில் நடந்து வந்ததினால்... இலேசாக காயத் தொடங்கியிருந்த சட்டையிலிருந்து வியர்வை வாடை விசுவதை அந்த வளாகத்தினுள் நுழைந்த பின்புதான் அவரால் உணர முடிந்தது.

பேரங்காடியில் வாங்கிய பொருட்களை எடுத்து வைக்க சிரமம் இல்லாமல் தள்ளிக் கொண்டு போவதற்காக ஒவ்வொருவரும் இருபது காசை மிஷினில் போட்டபின்பு பரபரப்புடன் அந்தத் தள்ளுவண்டிகளை எடுப்பதைச் சண்முகம் கவனித்தார்.

போவோர் வருவோரை யெல்லாம் உற்றுப் பார்க்கையில் இவர்களெல்லாம் அடிக்கடி இந்த மாதிரியான பேரங்காடி களுக்கு வந்து செல்பவர்களாகத் தான் இருக்க வேண்டுமென சண்முகம் யூகித்தார். இல்லை யென்றால் இவ்வளவு லாவகமாக பொருட்களை எடுப்பதும், பொருள் எங்கு இருக்கும் என்று உணர்ந்தவர்களாக நேரத்தைக் கடத்தாமல் துரிதமாக எடுத்து வண்டியினுள் போடுவது முடியுமா? சண்முகம் தனக்கு வண்டி தேவைப்படாது என்று உணர்ந்தவராய் ஒரு பக்கமாய் பொருள்களைப் பார்த்து ரசித்து நடக்கலானார்.

இளைஞர்கள், யுவதிகள், குடும்பப் பெண்கள், வயோதிகர், சிறுசுகள் எனப் பலதரப்பட்ட வரையும் அங்கு ஒரு சேரக் காணமுடிந்தது. நடக்க முடியாத வர்களைக்கூட அன்பாக சக்கர வண்டியில் வைத்து பரிவுடன் தள்ளிக்கொண்டு வந்ததைப் பார்த்து பரவசமடைந்தார்.

நடுத்தர வயது சீனப் பெண் ஒருத்தி ஒரு கையில் வயோதிகர் ஒருவரை சக்கர நாற்காலியில் தள்ளிக் கொண்டு மற்றொரு கையில் பொருட்களை வைப்பதற் கான தள்ளுவண்டியையும் ஒரு சேர லாவகமாக தள்ளிக்கொண்டு சிரித்த முகத்துடன் அவர் காட்டிய சில பொருட்களை வண்டியில் எடுத்துப்போட்டார்.

இடையிடையே கீழே குனிந்து அவர் காதோரத்தில் மென்மையாக ஏதோ பேசினாள். வயோதிகர் ஒருவேளை அந்தப் பெண்ணுக்கு அப்பாவாக இருக்க லாம். மாமனாராக இருக்கலாம். சிரமம் பாராமல் அவரையும் வெளியே அழைத்துவந்து காட்ட வேண்டும். என்று எண்ணியிருக் கிறாளே...? மனிதம் மரித்துவிட வில்லை. மனிதாபிமானம், மனித நேயம் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரு வரிசையில் பராக்குப் பார்த்துக்கொண்டு வந்தவரின் கண்களில் அவர் தேடிவந்த பொருள் தென்படாததால் அடுத்த வரிசைக்குள் நுழைந்தார்.

அவர் வாங்க எண்ணம் கொண்டிராத சில சாமான் களையும் கையில் எடுத்து விலையைப் பார்த்துவிட்டு மறுபடியும் அதே இடத்தில் வைப்பதுமாக இருந்தார்.

அவர் பார்த்திராத சாப் பிட்டிராத பல திடீர்வகை உணவு வகைகளைப் பார்த்து அதிசயித்துப் போனார். அவரின் முன்னால் ஒரு மலாய்க்கார குடும்பம் சென்று கொண் டிருந்தது. பிள்ளைகள் சுட்டிக் காட்டிய சில பொருட்களை எவ்வித மறுப்பும் சொல்லாமல் எடுத்து வண்டியில் போட்டுக் கொண்டு சென்றனர்.

விளையாட்டுச் சாமான்கள் வைத்திருக்கும் இடத்தில் சில பொருட்களை பெற்றோரிடம் அவற்றையெல்லாம் தொட்டுக் காண்பித்து ஏதேதோ பேசி மகிழ்ந்து கொண்டிருந்தனர். சிலர் அந்தப் பொருள் தனக்கு வேண்டும் என்று அடம் பிடிக்க தொடங்கினர்.

சண்முகம் அந்த இடத்தில் நின்று குழந்தைகளுக்கென்று இருந்த விதவிதமான விளை யாட்டுப் பொருட்களிலெல் லாம் கண்கள் விரிய ஒருவித பரவசத்துடன் நோட்டமிட்டார். ஆறுவயது நிரம்பிய பேரன் தனக்கு ஒரு சைக்கிள் வேண்டும் என்று சண்முகத்தை கொஞ்ச நாளாகவே நச்சரித்துக் கொண்டி ருப்பது அவரின் நினைவுக்கு வந்தது. அங்கிருக்கும் சைக்கிள் களில் அளவில் சிறியதாக இருக்கும் ஒரு சைக்கிள் பக்கம் தயங்கியவாறு சென்றார்.

ரொம்பவும் உயரமில்லாமல் பேரன் ஓட்டுவதற்கு கச்சிதமாக இருக்கும் என்று நினைத்துக் கீழே குனிந்து அதை தொட்டுப் பார்த்தது அதன் விலை எங்கே ஒட்டப்பட்டிருக்கிறது என்று தேடினார். ஒருவழியாக சைக்கிளின் கைப்பிடியில் கீழே சிறியதாக எழுதப்பட்டிருந்த விலையைப் பார்த்தார். இருநூற்று நாற்பத்தொன்பது ரிங்கிட் தொண்நூற்று ஒன்பது காசு என்று எழுதி இருந்ததைப் பார்த்து திடுக்கிட்டு நிமிர்ந்தார். இந்தச் சிறிய சைக்கிளுக்கு இவ்வளவு விலையா! அவர் காலத்தில் பெரியவர்கள் ஓட்டும் சைக்கிளையே இரண்டு மூன்று வாங்கி விடலாமே என்று நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டார்.

அவர் வாங்க வந்தது சைக்கிள் அல்ல! நீண்ட நாட்களாக பேரன் கேட்டுக் கொண்டிருக்கிறானே! கையில் காசிருக்கையில் வாங்கிக் கொடுக்கலாமே என்றுதான். அதன் விலையைப் பார்த்து வைத்துக் கொண்டார்.

எழுந்து நின்றவர் தன் சட்டைப் பையில் வைத்திருக்கும் பணத் 2தை தடவிப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டார். இன்று மூத்த பேரனுக்கு ஆறு வயது பிறந்தநாள்.

அவனுக்கு ஒரு சோடி சட்டை சிலுவார் வாங்குவதற்கு தான் பேரங்காடிக்கு வந்திருக் கிறார். இந்தப் பேரங்காடியில் துணி மணிகள் தள்ளுபடி விலையில் விற்பதாக வீட்டில் பேசிக் கொண்டார்கள். நல்ல தரமான துணிகள், விலைக் கழிவினால் குறைந்த விலையில் விற்பதை அறிந்துதான் இந்த இடத்தை தேர்ந்தெடுத்தார்.

வீட்டில் உள்ள ஒவ்வொரு வருக்கும் அவர்கள் விரும்பும் பொருட்களை வாங்கிக்

கொடுத்து அவர்கள் அடையும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள இவருக்கு ஆசைதான். என்ன செய்வது போதிய வருமானம் இல்லையே.

ஒரு பள்ளியில் நாற்பது ஆண்டுகளாகத் தோட்ட வேலை செய்தவர் சென்ற ஆண்டுதான் பணிஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதும் ஒரு நண்பரின் மூலமாக தற்சமயம் ஒரு வங்கியில் பாது காவலராக வேலை பார்க்கிறார். காலை ஏழு மணியிலிருந்து இரவு ஏழு வரை பன்னிரண்டு மணி நேரத்துக்கு ஒரே இடத்தில் நின்று அமர்ந்து வேலை பார்ப்பது சலிப்புத் தட்டினாலும், சுலப மாகக் கிடைக்கும் வேலை இதுதான் என்பதால் சகித்துக் கொண்டார். இன்னும் முதல் மாதச் சம்பளம் எடுக்கவில்லை. நடுத்தர வர்க்கத்தினருக்கும் கீழே இருக்கும் தன்னைப் போன்ற கடைநிலை வர்க்கத்தினருக்கும் இந்த வேலை தானே கை கொடுக்கிறது!

சண்முகம் வேலையில் மிகவும் சுறுசுறுப்பானவர். மிகவும் நல்லவர். எந்தக் கெட்ட பழக்க மும் இல்லாதவர். அவருக்கு மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள். அவர்களில் ஒரு ஆணும் பெண்ணும் பல் கலைக்கழகத்தில் பயின்று வரு கிறார்கள். மூத்த பெண்ணுக்குப் படிப்பில் ஆர்வம் இல்லாததால் பி.எம்.ஆர். தேர்வோடு தானாக வே நின்றுகொண்டு சிறிது காலம் ஒரு கம்பெனியில் வேலை செய்தவளுக்கு உரிய பருவம் வந்ததும் மாப்பிள்ளை பார்த்து முறையாகக் கட்டிக் கொடுத்து விட்டார்கள். ஆணும் பெண்ணும் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

சண்முகத்தின் ஓய்வூதியப் பணம் தண்ணீர், மின்சாரம், தொலை பேசி ஆஸ்ட்ரோ கட்டணங்களுக்கே சரியாக இருக்கும். பிள்ளைகளின் சம்பாத்தியத்தில் தான் குடும்பம் ஓரளவு நடக்கிறது. ஏதோ புத்திசாலித்தனத்தினால் பார்க்க வேண்டிய ஆளைப் பார்த்துப் பிடித்து ஒரு ரூமா மூராவை வாங்கிப்போட்டத்தினால் வீட்டு வாடகை கொடுக்க விழி பிதுங்கி நிற்கத் தேவை இல்லாமல் போயிற்று.

பால் மாவுகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பகுதிக் குள் நுழைந்தவர், புதுப்புதுப் பெயர்களில் விதவிதமாக வெளி வந்து கொண்டிருக்கும் மாவு களை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதில் தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் ஒரு மாவின் பெயரைச் சொல்லி இது எலும்புக்கு ரொம்ப நல்லதாங்க! எனக்கும் அடிக்கடி முட்டிகால் வலி வருது. டாக்டரும் எலும்புத்

தேய்மானம் ஏற்பட்டிருக்குன்னு சொல்லி இந்த மாவைத்தான் வாங்கிக் குடிக்கச் சொன்னாரு. விலைதான் கொஞ்சம் அதிகம் போல் இருக்கு!

மூன்று மாதங்களுக்கு முன்பு மனைவி முனியம்மாள் சொன்னது நினைவுக்கு வரவே அதை கையில் எடுத்து விலையைப் பார்த்தார். இருபத்தைந்து வெள்ளி எண்பத்தைந்து காசு என்றிருந்ததை விக்கித்துப் பார்த்த பின்பு மீண்டும் அதே இடத்தில் வைத்துவிட்டு அடுத்த மாதம் சம்பளம் கிடைத்ததும் மனைவிக்கு எப்படியாவது வாங்கிக் கொடுத் திட வேண்டும் என்று அப் பொழுதே தீர்மானித்து விட்டார்.

இன்னொரு பக்கம் சென்றவர் இளைஞர்கள், யுவதிகள் அணியும் ஜீன்ஸ் வகையறாக்கள் நேர்த்தியாக அடுக்கி வைத்திருப்பதைக் கண்டார். சிலவற்றை எடுத்து பிரித்தும் பார்த்தார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் மகன் போட்டுக் கொள்ள ஜீன்சும் டீ சட்டைகளும் கேட்டிருந்தான். போட்ட உடுப்புகளையே திரும்பத் திரும்ப போட்டுக் கொள்ள வெட்கமாக இருப்பதாகச் சொல்வான். மகளும் அதையேதான் ஒப்புவிப்பாள். அவர்களின் புலம்பலும் வாஸ் தவம்தானே! அடுத்த மாதம் கண்டிப்பாக வாங்கிக் கொடுத்திட வேண்டும்.

மீண்டும் தன்னிச்சையாய் சட்டைப்பையில் உள்ள பணத்தைக் கை சரிபார்த்தது. தேய்ந்து தளர்ந்துபோன ஜப்பான் சிலிப்பரை அவ்வப்போது கீழே குனிந்து பார்த்துக் கொண்டார்.

துவாரம் தளர்ந்துபோன அது எந்தநேரத்திலும் வெளியே வந்துவிடும் நிலையில் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

கௌரவமாகப் பலர் வந்து போகும் இடத்தில் தன் சிலிப்பர் திடீரென அறுந்து போனால் என்னாவது? நினைக்க வே கூசியது.

திடீரென பயமும் கவ்வியது. பலதரப்பட்ட மக்கள் குழுமி இருக்கும் இந்த இடத் தில் வேறுங்காலுடன் நடந்தால் அவமானமாகிப் போய் விடுமே என்று எண்ணியவராய் காலணிகள் அடுக்கி வைத்திருக்கும் பகுதிக்குச் சென்றார். பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதில் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாக இருந்தார்.

கையிருப்புக்குத் தோதான விலையில் செருப்பு ஒன்றைத் தேடினார். ஒரு ஜோடி ரொம்பவும் பிடித் திருந்தது. காலில் போட்டுப் பார்த்தார். பொருத்தமாகவே இருந்தது. விலையும் பரவாயில் லை. எட்டு வெள்ளி தொண்ணூறு காசு. வாங்கலாம் என்று நினைத்தவர் இன்று ஒருநாள் மட்டும்

சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணத்தை மாற்றிக் கொண்டார். சட்டைப் பையை மறுபடியும் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

வந்த வேலையை விட்டு விட்டு கூடுதல் பணமில்லாமல் சிறுசுகளைப் போல் கண்டதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோமே! சங்கடப்பட்டவராய் தன்னையே நொந்து கொண்டு சிறுவர் அணியும் உடைப் பகுதியைத் தேடிச் சென்றார்.

அற்புத வடிவில், கண்ணைக் கவரும் வண்ணத்தில் அழகழகான உடைகள் மனத்தை ஈர்த்தன. ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் வைத்திருக்கும் பணத்துக்கு ஏற்ற விலையில் துணிகளைத் தேடினார். பிரபலமான கார்ட்டூன் படமும் பெயரும் பொறிக்கப் பட்ட பனியன்கள் விரவிக் கிடந்தன.

இந்த மாதிரி படங்கள் பொறிக்கப்பட்ட சட்டைகளைத் தானே பிள்ளைகளுக்கும் பிடிக்கின்றது! பேரனுக்குப் பிடித்த மிக்கி மௌஸ் படத்துடன் இருந்த சிவப்பு நிறத்திலான பனியனையும் அதற்குப் பொருத்தமான ஒரு சிலுவாரையும் விலையைப் பார்த்து பார்த்து எடுத்தார். கை மீண்டும் சட்டைப் பையைத் தடவிப் பார்த்தது.

அவர் எடுத்த இரு துணிகளை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு பணம் கட்ட வரிசையில் பவ்வியமாக நின்று கொண்டிருந்தார். அக்கம் பக்கத்து வரிசைகளில் நிற்பவர்களையும் திரும்பிப் பார்த்தார்.

பெரும்பாலானவர்கள் பொருட்களைத் தள்ளிக் கொண்டு வருவதற்கு டுரோலியைத்தான் பயன்படுத்தியிருந்தார்கள். அவற்றுள் விதவிதமான பொருட்களை அவர் கள் வாரிப் போட்டிருந்ததை பிரமிப்புடன் பார்த்தார். அந்தப் பொருட்களுக்கான விலையை குத்து மதிப்பாக மனக்கணக்குப் போட்டார்.

''ம்... இது நானூறு வரும்!''

''அந்தப் பக்கம் ஐநூறுக்குத் தேறலாம்.''

''இது ஒரு இருநூற்று ஐம்பது இருக்கும் என்று உள்ளத்திலேயே விலையை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார். அவரின் கணக்குப்படியே ஒவ்வொருவரும் முந்நூறு, நாநூறு என்று பணத்தையும் இன்னும் சிலர் கடன்பற்று அட்டைகளையும் கௌன்டரில் நீட்டிக் கொண்டிருப்பதை பக்கவாட்டில் சற்றுத் தள்ளி நின்று கண்கள் விரிய வியந்து கொண்டிருந்தார்.

''இவர்களுக்கெல்லாம் வருமானம் எவ்வளவு இருக்கும்?

இப்படி ஆசைப்பட்டதையெல் லாம் வாங்கிக் குவிக்கிறார்களே? நாம் தான் இன்னும் ஓட்டாண்டி யா கிடக்கிறோம்'' என்ற எண்ணமே அவருக்குத் தோன்றி யது.

இவருடைய முறை வந்தது. தான் எடுத்திருந்த சட்டையை யும், சிலுவாரையும் கொடுத் தார். அதை வாங்கிய அந்த சீனப் பெண் ''இது மட்டும்தானா? என்று அலட்சியமாகக் கேட்டாள்.

அவரை ஒருமுறை ஏற இறங்க சலிப்போடுப் பார்த்தாள். அவளுக்கு என்ன கடுப்போ? பதினான்னு ரிங்கிட் தொண் ணூற்று ஒன்பது காசு என்றாள். சட்டைப் பையில் பத்திரப் படுத்தி வைத்திருந்த இரண்டு சிவப்பு நிறத் தாட்களை பயபக்தியோடு அவளிடம் நீட்டி னார். இலேசா கசங்கியிருந்த அந்த நோட்டு களை அப்படியும் இப்படியுமாக திருப்பிப் பார்த் தாள். ''என்ன ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொடுத்தது போல இப்படி பார்க்கிறாளே!''

துணிகளைப் பையில் போட்டு அதன் வாய்ப்புறத்தை மூடும்படி ரசீதை வைத்து 'ஸ்டெபலர்' அடித்து மீதப் பணத்துடன் அவர் பக்கமாகத் தள்ளிவிட்டாள். தான் விரும்பிய பொருளை வாங்கிவிட்ட மன நிறைவோடு பையை எடுத்துக் கொண்டு வாசலைக் கடந்த போது 'பீப் பீப்' என்ற அலறல் எழும்பியது.

கௌன்டர் அருகிலேயே இருந்த மேற்பார்வையாளர் சண்முகத்தை உள்ளே வரும்படி அழைத்தார். அவரும் வெல வெலத்துப்போய் உள்ளே வந்தார். அவரின் பொருட்களை சரிபார்க்கச் சொல்லிவிட்டு எல் லாம் சரியாகவே இருந்ததால் வெளியே போகச் சொன்னார். வாசலை அடைந்ததும் மீண்டும் அதே ஒலி கேட்டது.

அதற்குள் கடுகடுத்த இந்தோனீசிய பாது காவலன் வந்துவிட்டான். வந்தவன் அத சிடுசிடுத்த முகத்துடன்

''சட்டை சிலுவாருக்குள் ஏதும் மறைத்து வச்சிருக்கியா? சண்முகம் பதற்றத்துடன் ''இல்லை'' என்று நடுங்கிய குரலில் சொன்னார். ''உண்மைய ஒத்துக்க இல்லன்னா போலீஸ்ல ஒப்படைக்க வேண்டிவரும்.''

சண்முகம் எவ்வளவோ மறுத்தும் அவர் கேட்ட பாடில்லை!

''உன்ன உள்ளே அழைச்சடி போய் சட்ட சிலுவார் கழட்டி சோதனை போடணும்?''

''உன்ன போல ஒரு கிழவன் ரெண்டு வாரத்துக்கு முன்னாலே தன் பேத்திக்கு உள்சட்டைகளை திருடி மறச்சி வச்சிருந்தாரு! அவரு இப்போத ஜெயில்ல

இருக்கிறாரு தெரியுமில்ல? அந்தச் செய்திய பத்திரிகையில் பாத்திருப்பியே? உள்ளே வரப்பவே கவனிச்சேன் நீ ஒரு மாதிரியா தெரிஞ்ச! இன்னும் வாய்க்கு வந்த எதைஎதையோ சொல்லிக் கொண்டிருந்தான்.'' அவமானத்தால் கூனிக் குறுகி போனார் சண்முகம்.

அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படுபவன் நானில்லையே! கடவுளே இது என்ன சோதனை...? தொட்டுக்க தொடச்சிக்க என்று இருந்தாலும் மானத்தோடு வாழ்ந்தவனாச்சே!

பள்ளித் திடலில் எத்தனை கைப்பேசிகளையும் பணத்தையும் கட்டொழுங்கு ஆசிரியரிடம் கொண்டு போய் கொடுத்திருக்கிறார். மாணவி ஒருத்தி பூப்பெய்தி சடங்கு சுத்தியபிறகு மறந்தவளாய் நான்கு பவுன் சங்கிலியை பள்ளிக்கு அணிந்து கொண்டு வந்திருக்கிறாள்.

அந்தச் சங்கிலி பள்ளித் திடலில் விழுந்து கிடந்ததைக் கண்டெடுத்துப் பள்ளி நிர்வாகத்திடம் கொடுத்தவராயிற்றே! அப்படிப்பட்ட நாணயஸ்தன் இப்போது தலைகுனிந்து நிற்கும் அவலம்! அதற்குள் ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது. முகம் கவிழ்ந்து கலங்கி நின்றார். சண்முகம் தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இதைப் பார்த்துவிட்டாய்!

அவரின் பழுப்பேறிய ஆனால் ஸ்திரி போடப்பட்டு கோடு மறையாமல் இருக்கும் வெள்ளைச் சட்டையையும் சாம்பல் நிற பழைய சிலுவாரையும் நைந்து போன சிலிப்பரையும் பாதி நரைத்தும் மீதி செம்பட்டையுமான கேசத்தையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை எல்லாருமே பார்வையாலேயே எடை போட்டுக் கொண்டிருந்தனர்.

வலுக்கட்டாயமாக உள்ளே இழுத்துச் சென்றான் பாதுகாவலன். முழுமையாக சோதனையும் செய்துவிட்டான். அவன் கழுகுக் கண்களுக்கு ஒன்றுமே படவில்லை.

வாங்கிய துணிகளுக்குக் கொடுத்ததுபோக சில்லறைகளோடு ஐந்து ரிங்கிட்டும் அடையாள அட்டையும் மட்டுமே அவரின் பையில் இருந்தன.

சண்முகம் திருடியதற்கான எந்த அறிகுறியும் சோதனையில் தெரிவில்லை என்று மிகுந்த சலிப்போடும் ஏமாற்றத்தோடும் மேற்பார்வையாளரிடம் சொன்னான் பாதுகாவலன்.

அங்கு நடந்து கொண்டிருக்கும் களோபரத்தை நாற்பது வயது மதிக்கத்தக்க சுந்தரம் அப்போதுதான் கவனிக்கத் தொடங்கினார். என்ன நடந்தது என விசாரித்துத் தெரிந்து கொண்டார். ஒருமனிதன் அதுவும் தம் இனத்தவன் இப்படி அவமானப்

படுவதைப்பார்த்து சுந்தரத்துக்கு ரத்தம் சூடறியது.

சண்முகத்தைப் போகச் சொல்லி விரட்டினான் இந் தோனீசியன்.

பேரனுக்காகப் பார்த்துப் பார்த்து வாங்கிய துணி இந்த பை இப்போது அவர் கையில் இல்லை. நாடிநரம்பெல்லாம் ஒடுங்கிப்போன நிலையில் இரண்டடி எடுத்துவைத்தவரின் கால் இடறி தடுமாறி விழப் போனார். விறுட்டென்று அவரை கைத்தாங்கலாகப் பிடித்தார் சுந்தரம்.

சண்முகத்தின் சிலிப்பர் அறுந்துவிட்டது. மேலும் ஓர் அவமானம்! தன் நிலையை எண்ணி நொந்தவராக கீழே குனிந்து அதை எடுத்து கழன்று போனதை சரிசெய்ய முயன்றார் சண்முகம்.

பதறிப்போன சுந்தரம் சிலிப் பரின் பின் பக்கத்தில் ஒட்டி யிருந்த பின் பக்கத்தில் ஒட்டி யிருந்த கணினி 'பார்கோட்டு டன் இருந்த விலை சீட்டை யைப் பார்த்து கோபமாக சொருப்பை வாங்கினார்.'

''பாவம்...! அப்பாவி மனுசன இப்படி அவமானப் படுத்திட்டீங்களே? எத்தனைப் பேர் பாத்திட்டுப் போனாங்க.''

''எவனோ ஒருத்தன் பொருளைத் திருடிட்டு விலை, ஸ்டிக்கரை கீழே போட்டுட்டு போயிருக்கான். அது இந்த மனுஷன் சிலிப்பர்ல ஒட்டி யிருக்கு! அதனால்தான் அவர் வெளியே போகும்போது சத்தம் போட்டிருக்கு! அது தெரியாம இப்படி அசிங்கப்படுத்திடீங் களே? தமிழன்னா இளக்காரம் தான்! ஆளையும் அவன் உடுத்துறதையும் வச்சி எடைபோடாதீங்க.''

சுந்தரம் ஆங்காரமாக சண்முகத்துக்காக வரிந்து கட்டிக் கொண்டு பேசிக் கொண்டிருந் தார்.

சண்முகத்தின் ஒரு கால் சிலிப்பர் இன்னமும் சுந்தரத்தின் கையில்தான் இருந்தது. தன் காலில் இருந்த இன்னொன் றையும் கழற்றி குப்பையில் போட்டுவிட்டு வெறுங்காலு டன் அனிச்சையாக நடந்து போனார் சண்முகம்.

செருப்பு அறுந்துபோனால் மானம் போய்விடுமே என்று கலங்கியவருக்கு... இப்போது வெங்காலுடன் நடப்பது அவ மானமாகப் படவில்லை...!!

❍

**கோவிலுக்குச் கும்பிடச் சென்றவனை கும்பிட்டான் பிச்சைக்காரன் - யார் கடவுள்?**

# முனைவர் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு "Golden Wings" என்ற நூலை சென்னையில் இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள்



**கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கவிதைகளின் ஆங்கில மொழியெர்ப்பு நூலான 'கோல்டன் விங்ஸ்' என்ற நூலை இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு சென்னையில் வெளியிட்டார். அருகில் மொழிபெயர்ப்பாளர் முனைவர் கே. முருகேசன், எத்திராஜ் மகளிர் கல்லூரி பேராசிரியை விஜயலட்சுமி, முனைவர் மோ. பாட்டழகன்.**

# பூக்களின் சிரிப்பு!

கவிஞர் அ. இசை

முட்களின் சாந்த முகம்
செடிகளின் அலங்காரம்
இவைகளின் கிரீடம்!

கிரேக்கத்தில் போட்டியில்
மூன்றாவதாய் வருபவர்க்கு
வெள்ளி ரோஜா!

இரண்டாவதாய் வருபவர்க்குத்
தங்க ரோஜா!

முதலில் வருபவர்க்கு
அன்றைய தினம்
அரண்மனையில் பூத்த
புது ரோஜா!



Owned Published and Printed by P. Sangamithira Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai - 600 011. Printed at I.M. Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600 014. Editor : Dr. M. Pattazhagan